விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
R A M C O

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 09 ஞாயிற்றுக்கிழமை (23.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 155

## தீர்வுத் திட்ட மாதிரி அறிக்கை தயார்!
## இந்தியாவிடம் கையளிப்பார் ஜனாதிபதி

### சிங்கள நாளிதழ் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான அரசியல் தீர்வு உள்ளடங்கிய மாதிரி அறிக்கை ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஜூன் மாதம் இந்திய அரசாங்கத்திடம் கையளிக்க விருப்பதாகச் சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த மாதம் ஜனாதிபதி இந்தியாவுக்கு மேற்கொள்ளும் விஜயத்தின் போது இந்த அறிக்கையைக் கையளிக்கவுள்ளார். ஜனாதிபதி இந்த விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், அந் நாட்டு ஜனாதிபதி பிரதீபா பட்டேல் ஆகியோருடன் இந்த யோசனைகள் குறித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அரசாங்கம் உருவாக்கியுள்ள அரசியல் தீர்வுத் திட்டத்தில் 13-வது அரசியல் சாசனத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி அந்தத் திட்டத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டிய முழுமையான அதிகாரங்களை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியாவில் வெளியாகும் இந்துப் பத்திரிகைக்கு செவ்வியளித்த ஜனாதிபதி, 13-வது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வைத் தன்னால் வழங்க முடியும் என்ற போதிலும் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம் மக்களைச் சந்தித்துப் பேச
## கூட்டமைப்பினருக்கு அனுமதியில்லை

### மேலிட உத்தரவு என இராணுவம் தெரிவிப்பு

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் செட்டிக்குளம் முகாமைப் பார்வையிட அனுமதி வழங்கப்படவில்லை. நேற்றுக் காலை விஜயம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாப்புத் தரப்பினர் உள்ளே செல்ல அனுமதிக்காது சுமார் ஒரு மணிநேரம் முகாம் வாயிலில் காக்க வைத்து விட்டுத் திருப்பியனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னனுமதி பெறாததாலேயே எம்.பிக்கள் தடுக்கப்பட்டனர்

### அமைச்சர் ஹெகலிய விளக்கம்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி முகாம்களுக்குச் செல்லும் போது முன்னனுமதி பெற வேண்டும். ஆனால் கூட்டமைப்பு எம்.பிக்கள் அவ்வாறு எதனையும் பெறவில்லை என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கூறியதாவது, முகாமுக்குச் செல்வது தொடர்பில் ஏற்கனவே ஒரு நடைமுறையிருக்கின்றது. பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவித்து இது தொடர்பான அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த நடைமுறை அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இவர்கள் அந்த நடைமுறையைப் பின்பற்றியிருக்க மாட்டார்கள் என நான் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாபிரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் வூஜி பெட்ரோ மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள், குழந்தைகளுக்கான அபிவிருத்தியை முன்னெடுப்பதற்காகவே இவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அவர் நேற்று மாலை யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் பிரதேச செயலாளர்கள், பெண்கள் அபி (20 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கு ஊடகவியலாளர் செல்லத் தடை

### ★ இராணுவம் அறிவிப்பு ★

(கொழும்பு)

முல்லைத்தீவிற்கு ஊடகவியலாளர்கள் செல்ல முடியாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

படையினரின் வன்னிப் போர் நடவடிக்கையில் பல ஆயிரக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்ட முல்லைத்தீவு தொடக்கம் முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு வரையான பகுதிகளுக்கு ஊடகவியலாளர்கள் செல்ல முடியாது என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வன்னியில் மோதல்கள் நடந்த பகுதிகளுக்கு முழுமையாக ஊடகவியலாளர்களை அனுமதிக்காத அரசு தற்போதும் ஊடக அடக்கு முறையினை மேற்கொண்டு வருகின்றது.

இந் நிலையில் வவுனியாவிலுள்ள தடுப்பு முகாமுக்கு ஊடக (20 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர்க் குண்டு மன்னாரில் மீட்பு

(மன்னார்)

மன்னார் மூர்வீதி காட்டுபல்லிப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கு அருகாமையில் இருந்து புதைக்கப்பட்ட நிலையில் ஒரு கிலோ நிறையுடைய கிளைமோர்க் குண்டு ஒன்றை நேற்று முற்பகல் 11 மணியளவில் மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பிரதேசவாசி ஒருவர் வழங்கிய தகவலையடுத்துக் கிளைமோர்க் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கிளைமோர்க் குண்டு பொலித்தீன் மற்றும் பற்றரிகள் பொருத்தப்பட்ட நிலையில் இருந்ததாகவும் (20 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாந்தோட்டையிலிருந்து ஐ.தே.கவின் தலைமைத்துவம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த தலைமைத்துவம் அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து உருவாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடு மற்றும் கட்சியின் தலைமைத்துவங்கள் அம்பாந்தோட்டையிலிருந்து உருவாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். வெகு விரைவில் ஐக்கிய தேசியக் கட்சி சாரம் மற்றும் பெனியன் ஆடைகளை அணியும் கட்சியாக மாற்றமடையும்.

மக்கள் பெருமை அடையக் கூடிய வகையிலான தலைமைத்துவம் ஒன்று விரைவில் உருவாக்கப்படும். தற்போதைய தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து வரும் வேளையில் (20 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்ற விசாரணைகள் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பம்


(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதலாவது இராணுவ நீதிமன்றத்தின் விசாரணைகளை எதிர்வரும் முதலாம் திகதி மீண்டும் நடத்துவது என இராணுவத் தளபதி தீர்மானித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

முதலாவது இராணுவ நீதிமன்றத்தைக் கூட்டுவதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன் றம் விதித்திருந்த இடைக்காலத் தடையை நேற்று முன்தினம் விலக்கிக் கொண்டது.

இதையடுத்து இராணுவத் தளபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான (20 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட தென்னாபிரிக்க தூதுவர் வூஜி பெட்ரோ யாழ். அரச அதிபர் செயலகத்தில் பெண்கள் அபிவிருத்தித் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டார். இவ் நிகழ்வில் தூதுவர் வூஜி பெட்ரோ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மெஜித் ஆகியோர் உரையாற்றுவதையும் தென்னாபிரிக்காவில் இடம் பெறவுள்ள உலக கிண்ண போட்டி ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட அணிக்கு சீருடையை யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ், யாழ். மாவட்ட விளையாட்டுப் பொறுப்பதிகாரி திருமதி ரூபசிங்கம் ஆகியோரிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- ரம்சன்)

# போர்க்குற்றக் காட்சிகள் பொய்யானவை-அரசு

(கொழும்பு)

மனித உரிமை கண்காணிப்பகம் உலகம் முழுவதிலும் விநியோகம் செய்துள்ள போர்க்குற்ற காட்சிகள் அடங்கிய புகைப்படங்கள் அனைத்தும் போலியானவை என அரசை மேற்கோள் காட்டி திவயின சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைப் படையினர் தமிழ் இளைஞர்களை தென்னைமரத்துடன் கட்டிவைத்து கத்தியால் குத்தி கோரப்படுகொலைகளை மேற்கொள்வதாக சித்திரிக்கக் கூடிய 200 புகைப்படங்களை மனித உரிமை கண்காணிப்பகம் சர்வதேச ஊடகங்களுக்கு வழங்கியுள்ளது.

எனினும் போர்க் குற்றங்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் ஆதாரங்களை தொடர்ந்து நிராகரித்து வரும் இலங்கை அரசு, ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் என்ற மனித உரிமை கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள இந்தப் புகைப்படங்களையும் நிராகரித்துள்ளது.

இந்த புகைப்படங்கள் போலியானவை என இலங்கை அரசாங்கம் கண்டு பிடித்துள்ளதென தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்தப் புகைப்படங்களை வழங்கிய தரப்பினரை இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் அடையாளம் கண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையின் வான் படையினரே பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதாக இந்தப் புகைப்படங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளது என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ச-5)

## வடமராட்சி முழுவதும் செவ்வாயன்று மின்தடை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பிரதேசத்துக்கான மின் விநியோகம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலமாக்கும் வேலைக்காக உயர் அழுத்த மின் கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதாலேயே இவ் மின்தடை ஏற்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-2)

# தேர்தல் ஆணைக்குழுவொன்றை அமைக்க ஜனாதிபதி முயற்சி!

(கொழும்பு)

அரசியல் சாசன சபை அமுலில் இல்லாத போதிலும் அடுத்த ஓகஸ்ட் மாதத்திற்குமுன்னர்தேர்தல்ஆணைக் குழு ஒன்றை இயங்கச் செய்வது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கலந்துரையாடலும் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் பதவியிலிருந்து ஓய்வு பெறும் நோக்கில் இருக்கும் தேர்தல் ஆணையாளர் தற்போது நீண்ட விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ளார்.

நான்கு மாத விடுமுறையில் கடந்த 9ஆம் திகதி இங்கிலாந்து சென்ற தேர்தல் ஆணையாளர் தனது பதவியின் பொறுப்புக்களை தேர்தல் ஆணைக்குழுவிற்கோ அல்லது ஜனாதிபதியின் விருப்பத்திற்கு அமைய இடம்பெறும் நியமனத்திடமோ கையளிப்பதற்காக மீண்டும் இலங்கை திரும்புவார் என தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அரசியல் சாசனத்தின்படி தேர்தல் ஆணையாளர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் பதில் ஆணையாளர் ஒருவரை நியமிக்கமுடியாதென்பதால் தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணையாளர் ஒருவர் நியமிக்கும் வரை வடமாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட 35 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## இந்தியாவில் தஞ்சமடைந்த அகதிகள் சொந்த இடத்தில் குடியமர்த்தப்படுவர்

(சென்னை)

இந்தியாவில் சரணாகதியடைந்துள்ள இலங்கைத் தமிழர்கள் விரைவில் சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தசாப்தங்களாக நீடித்த யுத்தம் காரணமாக அதிக எண்ணிக்கையிலான இலங்கைத்தமிழர்கள் இந்தியாவில் சரணாதியடைந்துள்ளனர்.

யுத்தம் காரணமாக படகுகள் மூலம் தென் இந்தியாவில் சரணாகதியடைந்த குறித்த இலங்கையர்கள் நீண்ட காலமாக அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கின்றனர்.

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கை அகதிகள் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளதாக மீள் குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குறித்த அகதிகளை தமது சொந்தக் கிராமங்களில் மீள்குடியேற்றுவது தொடர்பிலான திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மீள்குடியேற்ற நடவடிக்கைகளை திட்டமிட்ட வகையில் முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## அபிவிருத்திப் பணிகளில் சிறைக் கைதிகள்

கொழும்பு வீதி அபிவிருத்திப் பணிகளில் சிறைக் கைதிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள இந்திய சர்வதேச திரைப்பட விழாவினை முன்னிட்டு வீதி அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் முன் னெடுக்கப்படுகிறது.

60 வீதமான கைதிகள் நகர அபிவிருத்திப் பணிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர சபையின் நிர்வாக அதிகாரி ஓமர் காமில் குறிப்பிட்டுள்ளார். (ச-5)


## மணமகள் தேவை

யாழ். இந்து வேளாளர் அவிட்டம் 1ஆம் பாதம் தனியார் வங்கி ஒன்றில் உதவி முகாமையாளர் ஆக கடமைபுரியும் 79ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றமில்லாத சூரியன், செவ். ஒரே வீட்டில் அமைந்த 44 கிரக பாவமுடைய மணமகனுக்கு அழகான பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: 077 0610943

(ச-299)


## இருபது-20 கிரிக்கெட்போட்டி

(கரவெட்டி)

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுவிழாவில் வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக் கிடையே நடைபெற்று வரும் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நாளை திங்கட்கிழமை நடை பெறும் போட்டியில் பிற்பகல் 3 மணிக்குஅண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ச-24)


## நினைவு அஞ்சலி



தோற்றம் 04 11 1935 — மறைவு 23 04 2010

எமது கல்லூரியின் கணக்கீடு ஆசிரியர்

செல்லையா திருக்குமரன் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் திருமதி செல்லையா கௌரீஸ்வரி**

கடந்த 23.04.2010 அன்று இறைவன் திருவடி அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/வட்டு இந்து நவோதயாக் கல்லூரி, சித்தன்கேணி.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்லூரி சமூகம்.

(ச-303)







## ஸ்ரீ ஸ்ரீ மஞ்சுநாதா ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

தனஞ்செயன் சாஸ்திரி

077 0366383

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

**துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்**

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11 நாட்களுக்குள் செய்து தரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

K.R.V. INN

252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(நல்லூர் கோயில் முன்பாக)

கைரேகை பார்க்கும் நேரம்:

காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பார்க்கப்படும்.

(1532)



## காணி வீடு விற்பனை

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு சமீபமாக (200M) திருஞானசம்பந்தர் வீதியில் நன்னீர் வளங்களுடன் வீடும் காணியும் உடன் விற்பனைக்கு.

தொடர்பு: 0777043852, 0773313104

(1558)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெறுவெளி அரங்கக் குழுவின் நாடக ஆற்றுகை

**ஷேக்ஸ்பியரின் ஒதல்லோ (OTHELLO)**

நெறியாளர்: க.ரதிதரன்

காலம்: 26.05.2010 பி.ப. 3.30-5.30

27.05.2010 மு.ப.10.30-12.30

28.05.2010 மு.ப. 10.30-12.30

இடம்: கைலாசபதி கலையரங்கம்

நுழைவுச் சீட்டு: பாடசாலை மாணவர்கள்-30, ஏனையோர்-70

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தயாரிப்பு: வெறுவெளி அரங்கக்குழு

நாடகமும் அரங்கக் கலைகளும் நுண்கலைத் துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(1555)

# நயினாதீவு ஆலய உற்சவ காலத்தினை முன்னிட்டு வேலணை பிரதேச சபையினால் விசேட ஏற்பாடுகள்

நயினைநாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இவ் உற்சவ காலத்தினை முன்னிட்டு வேலணை பிரதேச சபையினரால் குறிகாட்டுவான் இறங்குதுறை மற்றும் நயினாதீவுப் பிரதேசங்களில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களை விட இந்த வருடம் நாகபூசணி அம்மனைத் தரிசிக்க வருகின்ற வடபகுதி மற்றும் தென்பகுதி மக்களின் வருகை அதிகளவாக இருக்கும் என்பதால் இவ் விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகப் பொறுப்பதிகாரி விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிகாட்டுவான் இறங்குதுறைப் பகுதியில் குடிநீர் மற்றும் மலசல கூடத்துக்கான நீர் என்பனவற்றை வேலணை பிரதேச சபையின் 2 பவுசர்களின் மூலம் தினசரி அங்குள்ள நீர்த் தாங்கிகளில் நிரப்பி வருகின்றது. உற்சவ காலங்களில் பவுசர்களின் எண்ணிக்கையினை 4 ஆக அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது 18 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் 10 மலசல கூடங்கள் அமைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் நயினை நாகபூசணி அம்மனைத் தரிசிக்க வருகின்ற பக்தர்கள் தங்கிச் செல்வதற்காக இரண்டு மண்டபங்களின் கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதுடன் ஆயிரம் வாகனங்களைத் தரிப்பதற்கான இட ஒதுக்கீடும் இம்முறை செய்யப்பட்டுள்ளதுடன் சுகாதார வசதிகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாக வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகப் பொறுப்பதிகாரி விஜயகுமார் மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## மயானத்திற்கான கட்டணம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை கரைச்சி மயான சேமக்காலையில் தகனம் செய்பவர்களிடமிருந் தும் அடக்கம் செய்பவர்களிடமிருந்தும் மயான சேமக்காலையின் அபிவிருத்திக்காக ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணம் அறவீடு செய்ய கரைச்சி மயான சேமக்காலை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய தகனம் செய்வதற்கு ரூபா 500 உம் நல்லடக்கம் செய்வதற்கு ரூபா 500 உம் அறவிடப்படவுள்ளது.

எனவே மக்கள் இத்திட்டத்திற்கு ஒத்துழைக்கும் வண்ணம் சங்கானை கரைச்சி மயான சேமக்காலை அபிவிருத்திச்சபை செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (6)

## 20-20 மென்பந்து கிரிக்கெட் சுற்றுபோட்டி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு வடமராட்சி விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடைபெற்று வரும் 20-20 மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை8 மணிக்கு தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. அத்துடன் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாதனை விவேகானந்தா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (6-3-24)

## வைகாசி விசாக பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தென்மேற்கு விழிசிட்டி அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் விழா 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.(6)

## இராசி பலன்

*23-05-2010*

*(வைகாசி 9, ஞாயிற்றுக்கிழமை)*

*தசமி பிற்பகல் 12.06 மணிவரை*

*உத்தரம் பிற்பகல் 3.27 மணிவரை*

*இராகுகாலம் 4.22-5.52 மணிவரை*

*சுபநேரம் 8.52-10.22 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், போசனசுகம், உற்சாகம், செல்வாக்கு. |
| இடபம் | சிந்தனை மிகுதி, பணக்குறைவு, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | தன்னம்பிக்கைக் குறைவு, தெய்வசிந்தை, ரோகநிலை, அதிக பிரயாசை. |
| கடகம் | இஷ்ட சித்தி, இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, பெருமையடைதல். |
| சிங்கம் | விவாதம், போசன சுகக் குறைவு, காரிய தாமதம், கௌரவக்குறைவு. |
| கன்னி | புதிய சிந்தை, பித்தரோகம், போசன சுகம், நல்ல முயற்சி. |
| துலாம் | சயனசுகக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், மனஸ்தாபம், சுப செலவு. |
| விருச்சிகம் | எடுத்த காரியம் கைகூடும், உறவினர் வருகை, தனவருவாய், போசன சுகம். |
| தனுசு | அதிகாரம் ,நல்ல முயற்சி, நல்ல செய்தி, நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | கட்டுப்பாடு, பிரயாணம், தந்தைவழி உறவு, அதிகசெலவு. |
| கும்பம் | மனக்கிலேசம், போசன சுகம், முயற்சி தாமதம், பிரயாண பயம். |
| மீனம் | குடும்ப சுகம், காரிய நன்மை, தெய்வ நம்பிக்கை, போசன சுகம். |

வளவன்

## வாரம் ஒரு தகவல்

## கூந்தல் ஆராய்ச்சி

"என்ன சேர் என்ன ஆச்சு உங்களுக்கு? ஏன் இப்படித் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்?"

"பெண்களின் கூந்தலில் இருப்பது இயற்கை மணமா?, செயற்கை மணமா?"

"பழைய காலத்துக் கேள்வி சேர் இது?"

"இருக்கட்டுமே! இருந்தாலும் எனக்குப் பதில் தெரிய வேண்டும்"

"அதற்குப் பதில் என்னவென்பதை பிறகு யோசிக்கலாம். இதுக்குப் பதில் என்ன சொல்லுங்க"

"எதுக்கு"

"ஹங்கேரியில் சுக்ஸி என்ற கிராமத்தில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த எட்டுப் பேர் ஒருநாள் ராத்திரி தூங்கி எழும்பியதும் பார்த்தால் முடியெல்லாம் சுத்த வெள்ளையாக மாறி இருந்ததாம்?"

"ஆச்சரியமா இருக்கே!"

"இப்படி நடக்கிறதுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு இதே கிராமத்தில் வேறு ஆறு பேருக்கும் இதே போன்ற அனுபவம் ஏற்பட்டதாம்"

"என்ன காரணமாக இருக்கும்?"

"கொஞ்ச நாளைக்கு முன்னர் அந்த ஊரில் ஒருத்தர் சலவைத்தூள் விற்பனை பண்ணினாராம். அந்தத் தூள் தான் இந்தக் கெடுதலைப் பண்ணியிருக்கும் என்று முதலில் டாக்டர்களெல்லாம் சந்தேகப்பட்டார்களாம். ஆனால் அது காரணமில்லையாம்! ஏனெனில் அதே தூளை உபயோகப்படுத்திய வேறு சிலருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை"

"அப்படியானால் இப்படி திடீரென்று கறுப்பு முடி வெள்ளை முடியாக நிறம் மாறியதற்கு என்னதான் காரணம்?"

"அதைக் கண்டுபிடிப்பதற்குத் தான் இன்னமும் நிபுணர்களெல்லாம் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்களாம். உங்களை மாதிரி...?"

"அது இருக்கட்டும்... இதற்குப் பதில் சொல்லுங்க சேர்... பெண்களின் கூந்தல் மணம் இயற்கையா... செயற்கையா?"

"அது அந்தக் காலத்து ஆராய்ச்சி சேர்,இந்தக் காலத்தில் ஆராய வேண்டியது அது இல்லை "

"பின்னே... வேறு எது?"

"இருக்கிற கூந்தல் இயற்கையா, செயற்கையா?"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 90 | 100 | 95 |
| தக்காளி | 90 | 100 | 105 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 35 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 120 | 140 | 120 |
| பூசணி | 40 | 50 | 35 |
| புடோல் | 60 | 70 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 55 |
| பாகற்காய் | 80 | 90 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 50 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 45 |
| பயிற்றங்காய் | 120 | 130 | 80 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 200 | 220 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 80 | 90 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35 |

## அதிர்ஷ்டவசத்தால் உயிர் தப்பினேன்;விமான விபத்தில் காயங்களுடன் மீண்டவர் பேட்டி

(மங்களூர்)

மங்களூர் விமான விபத்தில் பெண் டாக்டர், சிறுவன் உட்பட 8 பேர் உயிர் தப்பினார்கள். அவர்களில் உமர் பாரூக் என்பவரும் ஒருவர். அவர் விமானத்தின் கடைசிப் பகுதியில் இருந்தார். விமானம் தீப்பிடித்து எரிந்த போது அதனுள் உமர் பாரூக் சிக்கிக் கொண்டார். அவரது முகம் மற்றும் கைகளில் தீக்காயம் ஏற்பட்டது. என்றாலும் துணிச்சலுடன் செயல் பட்டதால் உமர் பாரூக் உயிர் தப்பினார்.

அந்த அனுபவத்தை உமர் பாரூக் நிருபர்களிடம் விவரித்தார். அவர் கூறியதாவது,

நான் வந்த விமானம் முழுவதும் பயணிகள் இருந்தனர். எத்தனை பயணிகள் இருந்தனர் என்ற விபரம் எனக்குத் தெரியாது. விமானம் தரை இறங்க 5 நிமிடமே இருந்ததால் எல்லாரும் உற்சாகத்துடன் இருந்தோம். திடீரென விமானம் தள்ளாடியது. விமானத்தின் இறக்கை ஒன்று மலை மீது உரசியதை பார்க்க முடிந்தது. நாங்கள் எல்லாரும் அலறினோம்.

சிறிது நேரத்தில் மலை மீது பலத்த சத்தத்துடன் விமானம் மோதியது. விமானம் முழுக்க தீ பிடித்தது. எங்கும் புகையாக இருந்தது. உடலில் தீப்பிடித்ததால் பயணிகள் எல்லோரும் கூக்குரலிட்டனர். உதவி உதவி என்று அலறினார்கள். ஆனால் அந்த காட்டுக்குள் உடனே உதவிக்கு வர யாரும் இல்லை. என் அருகில் இருந்தவர்கள் எல்லோரும் மயங்கி சரிந்து கிடந்தனர். ஒரு நிமிடம் எனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை.

நான் இருந்த பகுதியில் விமானம் இரண்டாக பிளந்து கிடந்தது. இதனால் வெளியில் செல்ல வழி கிடைத்தது. தைரியத்தை வ வழைத்துக் கொண்டு எழுந்து



வெளியில் ஓடிவந் தேன். அடுத்த சில நிமிடங்களில் நான் இருந்த இடம் உட்பட விமானத்தின் பெரும் பகுதி வெடித்துச் சிதறியது.

என் அருகில் ஒரு பயணி கூட இல்லை. நான் மட்டும் தான்உயிர் பிழைத்ததாக நினைத்தேன். அந்த மலைக்காட்டுக்குள் தட்டுத் தடுமாறியபடி சுமார் அரை கிலோ மீற்றர் தூரம் நடந்து வந்தேன்.

அதற்குள் அந்த பகுதி கிராமமக்கள் விமானம் விழுந்த இடம் நோக்கி காட்டுக்குள் ஓடி வந்திருந்தனர். தீக்காயங்களுடன் வந்த என்னைப் பார்த்ததும் முதலுதவி செய்தனர். பிறகு ஒரு மோட்டார் சைக்கிளில் வைத்து என்னை சிறிது தூரம் அழைத்து வந்தனர்.

பிறகு ஏன்னை ஒரு ரிக்சாவில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மிக மோசமான விமான விபத்தில் இருந்து உயிர் தப்பியதை என்னால் இன்னும் நம்ப முடியவில்லை. இது எனக்கு மெய்சிலிர்க்க வைக்கும் அனுபவமாகும். நான் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பி உள்ளேன்.

விமானம் தீப்பிடித்து வெடித்ததை நினைக்கும் போது மனம் பக் பக் என அடித்துக் கொள்கிறது. அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை இவ்வாறு உமர் பாரூக் கூறினார். (6)

## தெமட்டகொடவில் செல்வந்தரை கடத்திய கடத்தல் குழுவின் முக்கிய நபர் கைது

கொழும்பு தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த செல்வந்தரான வர்த்தகர் ஒருவரை கடத்திச் சென்று அவரை சித்திரவதை செய்து அவரது குடும்பத்தினரிடம் 75 இலட்சம் ரூபாவை கப்பமாக கோரிய கடத்தல் குழுவொன்றின் முக்கிய நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட வர்த்தகரின் குடும்பத்தினரிடம் நேற்று முன்தினம் அதிகாலை கப்பப் பணத்தைப் பெற்றுக்கொள்ள தயாராக இருந்த போது கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் தெமட்டகொட பொலிஸ் அதிகாரிகளும் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் குறித்த வர்த்தகர் மீட்கப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட வர்த்தகர் சில தங்க நகை கடைகளின் உரிமையாளராவார். இவர் வியாழனன்று தெமட்டகொட சந்திக்கு சென்றிருந்த போது வெள்ளை வானில் சென்ற ஆயுத தாரிகள் அவரை கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்திச் சென்ற ஆயுததாரிகள் வர்த்தகரின் வீட்டுக்கு தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு வர்த்தகரை விடுவிக்க 75 இலட்சம் ரூபா கப்பம் கோரியுள்ளனர்.

அத்துடன் வர்த்தகர் தாக்கப்படும் சத்தமும் தொலைபேசியில் கேட்டுள்ளது. இதனால் குடும்பத்தினர் அச்சமடைந்து கப்பப் பணத்தை வழங்க முன்வந்துள்ளனர். அதே வேளை இது குறித்து வர்த்தகரின் உறவினர்கள் பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

தெமட்டகொட பொலிசார் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினருக்கு அறிவித்துள்ளனர். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் கப்பம் கோரிய நபர்களின் முக்கிய உறுப்பினர் ருவான்வெல்ல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டார்.

வான் ஒன்றில் அங்கு சென்றிருந்த கடத்தப்பட்ட வர்த்தகரின் உறவினர்களிடம் கப்ப பணத்தை பெற தயாரான நிலையில் அங்கு மறைந்திருந்த பொலிஸார் அவரை கைது செய்ய முயற்சித்த போது சந்தேக நபர் வர்த்தகரை கைவிட்டு தான் சென்ற வானில் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார்.

வானை கைப்பற்றிய பொலிஸார் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர் நிட்டம்புவ திஹாரிய பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்கள் கொழும்பு புதுக்கடை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.(2-6)

## கார்க்குண்டுத் தாக்குதலில் ஈராக்கில் 23 பேர் பலி

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருந்து 80 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தியாலா மாகாணத்தில் காலிஸ் நகரம் உள்ளது. அங்குள்ள மையப்பகுதியில் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கும் சந்தை உள்ளது.

நேற்று முன்தினம் மாலை இங்கு ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். அப்போது வெடிகுண்டு நிரப்பிய காருடன் தற்கொலை தீவிரவாதி அங்கு வந்தான். அவன் காருடன் ஒரு தேநீர் கடையின் மீது மோதினான்.

இதில் குண்டுகள் வெடித்து சிதறின. பல கடைகள் இடிந்து தரைமட்டமாயின. அங்கு பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டது. பொது மக்கள் நாலா புறமும் சிதறி ஓடினர்.

இதற்கிடையே குண்டு வெடிப்பு மற்றும் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி 23 பேர் பலியானார்கள் 53 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக வைத்தியசாலை அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதேபோல கடந்த வாரம் தல் அபிர் என்ற இடத்தில் 3 தற்கொலை தாக்குதல்கள் நடத்தப்பட்டது. அதில் 100 பேர் கொல்லப்பட்டனர். சமீப காலமாக ஷியா பிரிவினரை குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நடந்த தாக்குதலில் ஷியா பிரிவினர்தான் கொல்லப்பட்டுள்ளனர்.(2-6)

## உலகின் முதல்'செயற்கை உயிரி'யை விஞ்ஞானிகள் படைத்துள்ளனர்



செயற்கையாக உருவாக்கப் பட்டுள்ள பக்டீரியா

உலகின் முதல் செயற்கை உயிரி என்று வர்ணிக்கப்படுகின்ற ஒரு பக்டீரியாவை விஞ்ஞானிகள் படைத்துள்ளனர்.

கணனி ஒன்றைப் பயன்படுத்தி வெறுமனே நான்கு இரசாயனங்களைச் சேர்த்து கட்டமைக்கப்பட்ட டி.என்.ஏ.வால் கட்டுப்படுத்தப்படக்கூடிய ஒற்றை உயிரி ஒன்றை அவர்கள் உருவாக்கியுள்ளனர்.

இந்த பக்டீரியாவின் மரபணுப் பாரம்பரியம் என்பது ஒரு கணனிதான். ஆகவே செயற்கையாகப் படைக்கப்பட்ட முதல் உயிர் வடிவம் என்றால் அது நிச்சயம் இது தான் என்கிறார் இந்த செயற்கை உயிரியைப் படைத்திருக்கின்ற ஆராய்ச்சிக் குழுவின் தலைவர் டாக்டர் கிரெய்க் வெண்டர்.

அதாவது ஒரு பக்டீரியாவுக்கான மரபணுக் கட்டமைப்பை கணனி மென்பொருள் துணையுடன் வடிவமைத்து செயற்கையாக இரசாயனங்களைக் கலந்து உருவாக்கி அதனை ஒரு உயிரணுவுக்குள் செலுத்தி விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர்.

அவ்வாறு செயற்கை மரபணுக் கட்டமைப்பு செலுத்தப்பட்டவுடன் அந்த உயிரிகள் அந்த செயற்கை மரபணுக் கட்டமைப்புக்கு ஏற்ற வகையில் செயல்பட ஆரம்பித்துள்ளன.

அமெரிக்காவில் மேரிலாண்ட் மற்றும் கலிபோர்னியா மாகாணங்களிலிருந்து செயல்படும் ஜே.சி.வி.ஐ. என்ற ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த செயற்கை உயிரியை உருவாக்கியுள்ளனர்.

தி சயின்ஸ் என்ற அறிவியல் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள இந்தக் கண்டுபிடிப்பு அறிவியல் முன்னேற்றத்தில் ஒரு மாபெரும் முன்னேற்றம் என்று வருணிக்கப்படுகிறது.

மருந்தாக செயல்படக் கூடிய, எரிபொருளாக செயல்படக்கூடிய காற்று மண்டலத்திலிருந்து கரியமில வாயுவை உறிஞ்சி காற்றை சுத்தப்படுத்தக்கூடிய வகைகளில் எல்லாம் செயற்கை பக்டீரியாக்களை உருவாக்கி நாம் பலன் பெற முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

இயற்கையில் காணப்படும் இந்த பக்டீரியாவிலிருந்து இந்த செயற்கை பாக்டீரியாவை வேறுபடுத்திக் காட்டுவதற்காக செயற்கை



வெண்டர்

பக்டீரியாவின் மரபணுக் கட்டமைப் பில் அதனை உருவாக்கிய விஞ்ஞானியின் பெயர்கள் அவர்களின் இணையதள முகவரி போன்றவையும் அதிலே சேர்க்கப்பட்டுள்ளது.

பயோ என்ஜினியரிங் என்று சொல்லப்படும் இந்த உயிரியல் தொழில் நுட்பத்தால் ஒரு புதிய தொழில்துறைக்கான கதவுகள் திறந்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதேவேளை செயற்கையாக உயிரிகளைப் படைப்பது தார்மீக அடிப்படையில் சரியா தவறா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இவ்வாறான செயற்கை உயிரினங்களால் உலகத்துக்கு பெரிய ஆபத்துகளும் வரலாம் என்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (6-2)

## பாகிஸ்தானியர் மூவர் இங்கிலாந்தில் கொலை

இங்கிலாந்தில் லேன்ஸ்சி நகரில் உள்ள நெல்சன் பகுதியை சேர்ந்தவர் முகமது யூசுப் (51). பாகிஸ்தானை சேர்ந்தவர். இவர் தனது மனைவி பெர்வேஷ் (41). மகன் தான்யா(22) ஆகியோருடன் பாகிஸ்தானில் குஜராத்தில் உள்ள ஜாவுரா கிராமத்துக்கு வந்திருந்தார்.

இவர்கள் ஒரு இறுதி சடங்கு நிகழ்ச்சிக்காக வந்திருந்தனர். அப்போது துப்பாக்கியுடன் வந்த 4 மர்மநபர்கள் இவர்களை நோக்கி சரமாரியாக சுட்டனர். இதில் முகமது யூசுப் , மனைவி, மகள் ஆகிய 3 பேர் அதே இடத்தில் உயிரி ழந்தனர்.

மேலும் இவர்களது உறவுக்கார பெண்ணும் பலியானார். உறவினர்களுக்கு இடையே ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக இந்த கொலை நடத்திருக்கலாம் என கூறப்படுகிறது. (2-6)

## நான் ஒரு மார்க்சிஸ்ட்; தலாய்லாமா தெரிவிப்பு

(நியூயோர்க்)

திபெத்திய மதத் தலைவர் தலாய்லாமா தன்னை ஒரு மார்க்சிஸ்ட் என்று பிரகடனப் படுத்திக் கொண்டுள்ளார். நியுயோர்க் நகரில் நிகழ்த்திய சொற்பொழிவில் அவர் இதைத் தெரிவித்தார்.

முதலாளித்துவ கொள்கைகள் கம்யூனிஸ் நாட்டில் அதீத சுதந்திரத்தைக் கொண்டு வந்தது. அதுவே தன்னை சீனாவிலிருந்து வெளியேற்றக் காரணமாக அமைந்தது என்றார். அவர் மேலும் கூறியதாவது,

மார்க்சிய சிந்தனைகள் சில ஒழுக்க நெறிகளைக் கொண்டது. ஆனால் முதலாளித்துவ கொள்கையானது எப்படி இலாபம் ஈட்டுவது என்பதை மட்டுமே போதிக்கிறது. கம்யூனிஸ்ட் இலிருந்து விலகி சந்தைப் பொருளாதாரத்துக்கு சீனா மாறியதும் கம்யூனிஸ்ட் கொள்கைகளை கொஞ்சம் கொஞ்சமாக கைவிட ஆரம்பித்தது. பின்னர் அதையே அனைவரையும் பின்பற்றுமாறு வலியுறுத்தத் தொடங்கியது.

சீனாவில் முதலாளித்துவ கொள்கை வந்த பிறகு பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரம் பன்மடங்கு உயர்ந்துள்ளது.

போருக்கு எதிரான இயக்கம் தற்போது சர்வதேச அளவில் வலுப்பெற்று வருகிறது. ஹெயிட்டியில் நடைபெற்ற பூகம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலகெங்கிலிருமிருந்து கிடைத்த உதவி, அமெரிக்காவில் முதல் முறையாக கறுப்பு இனத்தவர் அதிபராக தேர்வு பெற்றுள்ளது ஆகிய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது மக்களிடையே மிகுந்த முதிர்ச்சி ஏற்பட்டுள்ளது தெளிவாகத் தெரிகிறது. தற்போது இந்த உலகமே நேசம் மிகுந்ததாகவும் ஒருங்கிணைந்த பகுதியாகவும் மாறிவருவதாகத் தோன்றுகிறது. இந்த கருத்துக்கள் தவறு என்று எவருக்கேனும் தோன்றினால் தெரிவிக்கலாம் என்று வேடிக்கையாகக் கேட்டார் தலாய்லாமா.

சீனாவின் கம்யூனிஸ ஆட்சியாளர்களுக்கு எதிராகப் பேசியதால் தான் 1959 ஆம் ஆண்டிலேயே அந்நாட்டிலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. இன்னமும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் மீது தனக்கு அச்சம் இருப்பதாக அவர் கூறினார். (6)

# கிளி, முல்லை .மாவட்ட

## க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான இறுதிக் கட்டபயிற்சி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த இவ்வருடம் க.பொ.த. உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்க ளுக்கான இறுதிக்கட்டப் பயிற்சி செயலமர்வுகளை கொழும்பு யாழ் .பிரபல ஆசிரியர்களைக் கொண்டு நடத்துவதற்கு மாகாணக் கல்வியமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கான செயலமர்வு கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும் முல்லைத் தீவு மாவட்ட மாணவர்களுக்கான செயலமர்வு வவுனியா காமினி மகாவித்தியாலயத்திலும் நடத்தப்படவுள்ளது.

யூன் மாதம் முதலாம் திகதி முதல் 4 ஆம் திகதிவரை நடைபெறும் செயலமர்வில் முதல் இரு நாட்களும் உயிரியல், இணைந்த கணிதம் செயலமர்வு மற்றைய இரு நாட்களும் இரசாயனவியல் செயலமர்வு இடம் பெறவுள்ளது.

மேலும் யூன்மாதம் 14 ஆம் திகதிமுதல் 17ஆம் திகதிவரை மற்றும் 28ஆம் திகதி முதல் யூலை மாதம் முதலாம் திகதி வரையும் செயலமர்வுகள் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (6)

## "உள்ளம் பெருங்கோயில்" நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை கலை இலக்கிய களத்தினரின் ஏற்பாட்டில் கோகிலா மகேந்திரனின் உள்ளம் பெருங்கோயில் நூல் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நூல் ஆய்வுரையை ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் வழங்கவுள்ளதுடன் முதல் பிரதியை திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம் பெற்றுக்கொள்வார். (6)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க 3கோடியே 75 இலட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ள 5 இலட்சத்து 22 ஆயிரத்து 171 பேருக்கும் உடனடி நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்கவென இடர் முகாமைத்துவ அமைச்சு 37.5 மில்லியன் (மூன்று கோடியே 75 இலட்சம்) ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதில் முன்னாயத்தப் பணிகளுக்காக 2.5. மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய நிவாரணங்களுக்காக எஞ்சிய தொகை பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள 14 மாவட்டங்களிலுமாக மூன்று இலட்சத்து ஆறாயிரம் பேர் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் 85 முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்கவும் வெள்ளத்தில் சிக்குண்டவர்களை பாதுகாப்பாக மீட்கவுமெனக் கடற்படையின் 30 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சுமார் 300 கடற்படையினர் மக்களுக்கு உணவு உள்ளிட்ட நிவாரணங்களை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் அதுல செனரத் தெரிவித்தார்.

பாரிய மீட்புப் பணியை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படவில்லையென்றும் வெள்ளத்தினால் சிக்குண்டவர்களை மீட்கும்பணியையும் நிவாரணங்களை விநியோகித் தலையும் மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார். (2-6)


உங்களை உணருங்கள் 'ஜெய் குருதேவ்' அன்பில் மலருங்கள்



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்

THE ART OF LIVING

வாழும் கலை பயிற்சி

உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாக பயிற்றப்படும் வாழும் கலைப் பயிற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.

சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளிய யோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி

- ஞாபகசக்தி அதிகரிக்க
- நிகழ்காலத்தில் வாழ
- மனதை ஒரு நிலைப்படுத்த
- வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
- ஆஸ்மா, இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்து கொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறிமுக உரை

இடம்:கம்பன் கோட்டம் -நல்லூர்
காலம்: 24.05.2010 (திங்கட்கிழமை)
நேரம்: மாலை 5.30 மணிக்கு
பயிற்சி நாட்கள்: 25.05.2010 (செவ்வாய்க்கிழமை) முதல் 30.05.2010 (ஞாயிற்றுக்கிழமை) வரை

குறிப்பு:- ஏற்கனவே பயிற்சி எடுத்தவர்களுக்கான சுதர்சனக் கிரியா 30.05.2010 (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.50 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு :

வாழும் கலை அற நிறுவனம்-யாழ். மையம்.

T.P.: 021 222 7030, 077 1777998


# 23.05.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1568- நெதர்லாந்து ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1805- நெப்போலியன் பொனபார்ட் இத்தாலியின் மன்னனாக முடி சூடினான்.
- 1813 -தென்னமெரிக்க விடுதலைப்போராட்டத் தலைவர் சிமோன் பொலிவார் வெனிசுவேலாவின் முற்றுகைக்குத் தலைமை வகித்துச் சென்று விடுவிப்பாளர் எனத் தன்னை அறிவித்தார்.
- 1846- மெக்சிக்கோ, ஐக்கிய அமெரிக்க மீது போரை அறிவித்தது.
- 1865-வோஷிங்டன் டிசியில் அமெரிக்க உள்நாட்டுப்போர் முடிவுற்றமை கொண்டாடப்பட்டது.
- 1915- முதலாம் உலகப்போர்: இத்தாலி, ஆஸ்திரியா-ஹங்கேரி மீது போரை அறிவித்தது.
- 1929-மிக்கி மவுசின் முதலாவது பேசும் கார்ட்டூன் கார்னிவல் கிட் வெளி வந்தது.
- 1949- ஜெர்மன் கூட்டாட்சி குடியரசு அமைக்கப்பட்டது.
- 1951- திபெத்தின் விடுதலைக்கான 17 அம்ச உடன் பாட்டில் திபெத்தியர்கள் கட்டாயமாகக் கைச்சாத்திட வைக்கப்பட்டார்கள்.
- 1958-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்மதி எக்ஸ்புளோரர் 1தனது பூமியுடனான தொடர்பை இழந்தது.
- 1998-புனித வெள்ளி உடன்பாட்டிற்கு ஆதரவாக வடஅயர்லாந்து மக்களில் 71 வீதமானோர் வாக்களித்தனர்.

### பிறப்புக்கள்

- 1707-கரோலஸ் லின்னேயஸ், தற்கால வாழ் சூழலியலின் முன்னோடி (இ.1778)

*1906 - நவீன நாடக இலக்கியத்தின் தந்தை ஹென்றிக் இப்சன் மரணமடைந்தார். (பிறப்பு-1828)*




# முன்னாள் போராளிகள் 100 பேருக்கு மூன்று மாத கால சாரதிப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தைச் சேர்ந்த புனர்வாழ்வளிக்கப்பட்ட 100 முன்னாள் போராளிகளுக்கு முதற்தடவையாக மூன்றுமாத கால சாரதிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

புனவர்வாழ்வளிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் முகமாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியால் இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.



சாரதிப்பயிற்சி பெறுவதற் காக இவர்கள் நேற்று யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டதுடன் இதற்கான பொறுப்பை மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளர் ரி. இராசநாயகம் ஏற்றிருந்தார்.

இவர்களுக்கான தங்குமிட உணவு வசதிகள் வழங்கப்படுவதுடன் பயிற்சியின் நிறைவில் சிறப்பு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

(6-7)

# புதிய சுகாதார அமைச்சருடன் முரண்பாடு எதுவும் இல்லை

## நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

புதிய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிற்கும் தமக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லையென முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய நீர்ப்பாசன அமைச் சருமான நிமால் சிறி பால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போதைய சுகாதார அமைச் சருக்கும் தமக்கு முரண்பாடு காணப்படுவதாக சில ஊடகங்களும் ஐக்கிய தேசியக் கட்சியும் வெளியிடும் கருத்துக்களில் எவ்வித உண்மையும் கிடையாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அரசாங்கத்தை பாதுகாப்பதற்கு நட வடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரி வித்துள்ளார்.

மேலும் சில ஊடகங்கள் எமக்கு இடையே பிளவினை ஏற்படுத்த பல் வேறு வழிகளில் முயற்சிகளில் இறங்கியுள்ளதாகவும் கடந்த காலங்களில்மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதில் நிதிப்பிரச்சினை காணப்பட்டதாகவும் மேலும் ஊடகங்களில் பூதாகரமாக வெளிப்படுத்தப் படும் அளவிற்கு நாட்டில் அப்போதும் இப்போதும் மருந்துத்தட்டுப்பாடு கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (2-6)

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19
வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2010

# நீண்டகாலமாக செப்பனிடப்படாத வீதி; திருத்தித் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை

(வட்டுக்கோட்டை)

சங்கரத்தையில் இருந்து சங்கானைக்கு செல்லும் சங்கரத்தை சின்னம்மாவித்தியா சாலைக்கு அருகிலுள்ள சிறிய வீதி நீண்ட காலமாக செப்பனிடப்படாமல் பழுதடைந்து காணப்படுவதோடு வெள்ளநீர் தேங்கி பொது மக்களின் பாவனைக்கு இடையூறாக காணப்படுகிறது.


மேற்படி வீதியினை திருத்தித்தருமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்தபோதும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மேற்படி வீதியினை உடனடியாக சீர் செய்து தருமாறும் சம்பந்தப்பட் டஅதிகாரிகளை பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றார்கள். (6-27)


மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்



கௌரவ அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா



யாழ். மாவட்ட அமைப்பாளர்
திரு. கந்தசாமி கமலேந்திரன் (கமல்)



தீவக வலய அமைப்பாளர்
தோழர் காந்தன்

திக்கெட்டும் புகழ் பரப்பும் தீவக மண்ணில்
தீர்க்கமுடியா பலவற்றை தீர்த்து வைத்த செம்மல்
கல்வி கற்கும் சிறார்க்கு கற்பக தருவாக
கலங்கரை விளக்கமாய் திசை காட்டி விட்ட மேலோன்!

கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 7ஆவது பாராளுமன்ற அமர்வில் "பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சராக" பொறுப்பேற்றுக் கொண்டமையையிட்டு அவரை வாயார வாழ்த்துவதோடு அவரின் பணி மேலும் சிறக்க இறையாசீர் வேண்டுவதுடன் அவரோடு இணைந்து செயற்பட்ட எமது தீவக வலய அமைப்பாளர் தோழர் காந்தன், யாழ். வலய அமைப்பாளர் தோழர் கமல் ஆகியோரையும் வாழ்த்தி நிற்பதோடு இவர்கள் வழியாக எமக்குக் கிடைத்த அனைத்து நன்மைகளுக்காகவும் எமது மனப்பூர்வ நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

நன்றியுணர்வோடு வாழ்த்துவோர்:-

1. புனித மரியாள் ஆலய நிர்வாகத்தினர்
2. புனித அந்தோனியார் கல்லூரிச் சமூகம்
3. ஊர்காவற்துறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை
4. கிறிஸ்து இல்ல இயக்குனரும் நிர்வாகத்தினரும்
5. "றேஞ்சர்ஸ்" விளையாட்டுக் கழக நிர்வாகத்தினர்

(1551)

# உழைத்து வளமாக வாழ்ந்த மக்கள் இன்று நிர்க்கதியாக ஆறாத்துயருடன்...

**கடந்த வாரம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங் களுக்குச் சென்று திரும்பியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஜூனியர் விகடனுக்கு வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகின்றது.**

கடுமையான நெருக்கடிகளுக்கு நடுவிலும், கடந்த வாரம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் சென்று வந்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



எம்.பியான சுரேஷ் பிரேமச்சந்திரன். சென்னை வந்துள்ள அவரைச் சந்தித்து, சில கேள்விகளை முன்வைத்தோம்.

**கேள்வி:** *" எந்த வழியாகச் சென்றீர்கள்? வழியில் இராணுவத் தடைகள் இருந்தனவா?"*

பதில்:-யாழ்ப்பாணத்தில் இருந்து ஆனையிறவு, கிளிநொச்சி, மாங்குளம் ஊடாக முல்லைத்தீவு சென்றோம். வழியெங்கும் பல இடங்களில் இராணுவத்தினர் உள்ளனர். படை முகாம்களும், சோதனைச் சாவடிகளும் இருக்கின்றன. மாங்குளத்தில் இருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் சாலையில், நான்காவது கிலோமீற்றரில் ஒரு பெரிய சோதனைச் சாவடி. அங்கே வாகன இலக்கத்தைப் பதிவுசெய்துகொண்டு, பயணத்தைப் பற்றிக் கேட்டார்கள். முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரைச் சந்திக்கச் செல்வதாகக் கூறியதும் விட்டுவிட்டார்கள்"

**கேள்வி:** *" எங்கெங்கே சென்றீர்கள்? இப்போது, அந்த இடங்கள் எப்படி உள்ளன?"*

"கிளிநொச்சி, முல்லைத்தீவு, முல்லைத்தீவு நகரம், தண்ணீரூற்று, முள்ளியவளை,



தற்காலிக வசிப்பிடம்

ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு ஆகிய இடங்களைப் பார்த்தோம். சுமார் மூன்று இலட்சம் வீடுகள் இருந்த இரண்டு மாவட்டங்களில், பெரும்பாலான கட்டடங்கள் முற்றிலுமாகச் சேதம் அடைந்துள்ளன. மாவட்ட அரசு அதிபர் கட்டடம் போன்ற சில இடங்களில்தான் பாதிப்பு இல்லை"

**கேள்வி:** *" மீள்குடியேற்றப்பட்ட மக்களின் நிலைமை என்ன?"*

பதில்:- " மீள்குடியேற்றப்பட்ட என்று சொல்வதைவிட, 'முகாமில் இருந்து வெளியே அனுப்பப்பட்ட' என்று மட்டும்தான் சொல்ல வேண்டும். சொந்த ஊருக்குத் திரும்பினார்களே தவிர, அங்கே சொந்த வீடுகளே இல்லை. 99 சதவிகிதம் போரின் வீடுகள் முழுவதும் பயன்படுத்த முடியாத அளவுக்கு இராணுத் தாக்குதலால் தகர்த்தப்பட்டுள்ளன.

பெரிய பெரிய கல் வீடுகளில் வாழ்ந்தவர்களும் இப்போது மரத்தடிகளில் தான் சுருண்டு கிடக்கிறார்கள். ஊர் திரும்புவோருக்கு ஐ.நா. அகதிகள் ஆணையம் சார்பில், 5ஆயிரம் ரூபாய் பணம் தருகின்றனர். வீடுகளைச் செப்பனிட இந்தத் தொகை கொஞ்சமும் போதாது. அகதிகள் ஆணையம் வழங்கும் 10 தகரங்களையோ, தறப்பாள்களையோ வைத்து தற்காலிக வசிப்பிடம் அமைத்து அதில் தான் மக்கள் பசியில் கிடக்கின்றனர்!"

**கேள்வி:** *" மக்கள், வயிற்றுப் பசியாற என்ன செய்கிறார்கள்?"*

பதில்:" இரண்டு மாவட்டங்களிலும் விவசாயமும் மீன்பிடியும்தான் தொழில்கள். இங்குள்ள 75 சதவிகித மக்கள் உழைத்து வளமாக வாழ்ந்தார்கள். இன்று அடிமட்டத்துக்கு வந்துவிட்டார்கள்.

ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் நெல் பயிரிடப்பட்டது. ஒவ்வொரு குடும்பமும் 10 ஏக்கர், 20ஏக்கர் என்று பயிர்செய்து வந்தனர். ஏராளமான காய்கறிகளையும் பயிரிட்டு வட மாகாணம் முழுவதும் தந்தவர்கள் அவர்கள்.

ஆனால், அவர்களால் அங்கு இப்போது எதுவும் செய்ய முடியவில்லை. விதை நெல் கிடையாது, உரம், கிருமிநாசினிக்கு வழி இல்லை, உழைக்க கருவிகள் இல்லை. உணவுக்கும் வழி இல்லை.

பல விவசாயிகளின் நிலங்களில் இராணுவம் முகாம்கள் அமைந்துவிட்டது. பல இடங்களில் இராணுவ நிரந்தர முகாம்களுக்காக, பெரும் அளவில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதில் விவசாய நிலங்களும் அடக்கம்.

மேலும் மாடுகளையும் அபகரித்து விட்டார்கள். பல பகுதிகளுக்குச் செல்ல விடாமல் மக்களை இராணுவம் தடுப்பதால் , காணாமல் போன மாடுகளைத் தேடவும் வாய்ப்பு இல்லை. நீண்டகாலம் உரிமையாளரின் பராமரிப்பு இல்லாததால், அந்த மாடுகள் கட்டாக்காலி மாடுகளாகத் திரிகின்றன. இவற்றில், கணிசமானவற்றை பண்ணைகளில் பார்த்ததாகக் கூறிய மக்கள், அதைக் கேட்கும் துணிவின்றி நிற்கின்றார்கள்.

மீனவர்களின் நிலையும் படுமோசம். அவர்களுக்கு வலையோ, படகு இயந்திரமோ எதையும் வழங்கவில்லை. மீன்பிடிக்க பல இடங்களில் அனுமதி அளித்ததாக அரசு கூறுகிறது. ஆனால், வற்றாப்பளை என்ற மீனவக் கிராமத்தில் நந்திக்கடலை ஒட்டி, குறிப்பிட்ட பகுதியில் (கடைசிக் கட்டப் போரில் மக்கள் அரசுப் பகுதிக்கு நடந்து வந்த பகுதி இது) மட்டும் தான் மீன்பிடிக்க அனுமதி அளிக் கப்படுகிறது.

அதுவும் நடந்தே சென்று மீன்பிடிக்கக் கூடிய சிறிய பகுதியில் மட்டும் அனுமதி தரப் பட்டுள்ளதால், அதிகம் பேர் குவிய...

## முல்லைத்தீவில் சுரேஷ் பிரேமச்சந்திரன்




குறை வான மீன்களே கிடைக்கின்றன. ஒரு நாளைக்கு 100, 150 ரூபாய் வரை கிடைத்தாலே பெரிய விடயம். ஒரு சிறிய குடும்பத்துக்கே இந்தத் தொகை போதாது.

குழந்தை உள்ள குடும்பத்தினர், வாரம் தோறும் உலக உணவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் அரிசி, பருப்பு, சீனியை விற்று, அதன்மூலம் குழந்தைகளுக்குப் பால் மாவு வாங்கிக் கொடுக்க வேண்டிய நிலை!"

**கேள்வி:** *" நீங்கள் இப்படிச் சொல் கிறீர்கள்... ஆனால், உரிய முறையில் மக்களை மீள்குடியேற்றம் செய்வதாக அரசுத் தரப்பு கூறுகிறதே?"*

பதில்: " இதற்கு நான் ஓர் உதாரணத்தைச் சொல்ல முடியும். கிளிநொச்சி மாவட்டத்தில் சாந்திபுரம் என்று ஒரு கிராமத்தில், 400 குடும்பங்கள் முன்பு இருந்தன. இவர்கள் முகாம்களில் இருந்து வந்ததும், 100 குடும் பங்களுக்கு மட்டும் கல்வீடுகள் கட்டித்தரப் பட்டன. ஆனால், அவர்களை அங்கே வசிக்க விடாமல் மீண்டும் முகாம் களுக்கே அனுப்பி விட்டனர்.

மேலும், முகாம்களில் இருந்து ஊருக்கு அனுப்பப்படும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 ஆயிரம் தரப்படுவது தவிர 20 ஆயிரம்




ரூபாய் வங்கியில் போடப் படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் அப்படி வங்கியில் பணம் செலுத்தப்பட்டு வங்கிப் புத்தகம் எதுவும் யாருக்கும் இதுவரை வழங் கப்படவில்லை.

**கேள்வி:** *"கடைசியாகப் போர் நடந்த கடலோரப் பகுதியில் என்ன பார்த்தீர்கள்?"*

பதில்:"இராணுவத் தாக்குதல் நடந்த முள்ளிவாய்க்கால், மாத்தளன் கடல்பகுதியை இராணுவம் தன் பாதுகாப்பில் வைத்திருக்கிறது.

மாங்குளத்தில் இருந்து முல்லைத்தீவுக்கு என்னை அனுமதித்த படையினர், ஒட்டுசுட்டான் சந்தி என்ற இடத்துக்கு மேல் செல்லவிடாமல் தடுத்துவிட்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் என்று நான்கூறியும் உங்களுக்கு மாவட்ட அரச அதிபரைச் சந்திக்கதான் அனுமதி உள்ளது என்று தடுத்து விட்டார்கள். அதற்கு, அங்கே கண்ணிவெடிகளை அகற்றுவதாக அரச தரப்பில் காரணம் சொல்லப்படுகிறது.

**கேள்வி:** *"அங்கு கண்ணிவெடி அகற்றப்படுவது உண்மைதானா? இது பற்றி மக்கள் என்ன சொல்கிறார்கள்?"*

பதில்: வற்றாப்பளை கிராமத்தில் மட்டும் 15 பேர் கொண்ட குழுவினர் கண்ணிவெடியை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இதே போல, எல்லாக் கிராமங்களிலும் கண்ணிவெடி இருக்கவேண்டும் என்பதில்லை. அப்படிச் சொல்வது தவறு. ஓரிரு இடங்களில் கண்ணிவெடிகளை புலிகளும் வைத்திருக்கலாம். இராணுவமும் தற்காப்புக்காக வைத்திருக்கலாம்.

ஆனால், கடைசிக் கட்டத் தாக்குதல் நடத்தப்பட்ட மாத்தளன், முள்ளிவாய்க்கால் கடலோரத்தில் நின்ற மக்கள், தங்கள் நகைகளையும் உடைமைகளையும் அங்கு பல இடங்களில் புதைத்து வைத்துள்ளனர். அவற்றின் நிலை குறித்து மக்கள் கவலையடைகின்றனர்.

இலங்கை இராணுவத்தின் மீது போர்க் குற்றச்சாட்டு வலுத்துவரும் நிலையில், அரசாங்கத்தின் தடையானது சந்தேகங்களை வலுவாக்குகிறது!" என்று கவலை வார்த்தைகளில் இறக்கிவைத்தார் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.!

*நன்றி :- ஜூனியர் விகடன்*

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### (அ) நாகரிகம்

கணுக்கால் மறைத்துத்
திரியக் கண்ட-கண்ணகி
காலத்துப் பெண்கள்
போலவே-இன்று...
எங்கள் ஊரில்
முழங்கால் தெரியத்
திரியக்கண்டு...
திகைத்து நிற்கின்றோம்!
அந்திய நாட்டு நடப்பு
பெண்கள் உருவில் மட்டுமா?
ஆடவர் கூடச் சளைக்கவில்லை.
நடக்கிறது நாகரிகப் போர்!
தமிழ் கலாசாரத்துக்கு
கல்லறைகள் எழும்புகின்றன.

பொலிகையூர்
ஸ்ரீ.சுனந்தன்

### ஆயிரம் மனங்களின் ஆறாத காயங்கள்

காயப்பட்ட மனதின்
சித்திரவதைகள் ஒவ்வொன்றும்
அதன் ஓலங்களால்
செவிதுளைக்க
ஒரு ஓவியப் பாவை போல்
அழுகின்றன கண்கள்
கண்ணீர் துடைப்பது போல்
விழியின் வழி
உள் நுழையத் துடிக்கின்றன கைகள்
மனதின் காயத்திற்கு
மருந்திடுவதற்காக...
நொடிப்பொழுதில்
இமைக் கதவுகள்
அறைந்து சாத்தப்படுகின்றன.
உள்ளே அனுமதித்தால்
தன் உயிர் போய்விடுமாம்

ரி.சீதா
யாழ்.பல்கலைக்கழகம்.

### நட்புக்கொரு எடுத்துக்காட்டு

நண்பியே!
நான் எத்தனை கவலையுடன்
உன்னிடம் வந்தாலும்
உன் இனிமையான பேச்சும்
இதமான புன்னகையும்
கனிவான பார்வையும்
என் கவலையை விரட்டுகிறது
உன் சிரிப்பிலும்
பார்வையிலும் பேச்சிலும்
உள்ள மாயம் தான் என்ன?

எம்.திவ்யா
சங்கானை

### நீ என்று....

இந்தக் காம்பில்
இந்தப் பூ
எப்படி மலர்ந்தது என்று
என் கவிதையை பார்த்து
உலகம் வியக்கிறது...
அதற்கு தெரியாது!
விதையாக இருந்தது
நீ என்று...

க.சாந்தகுமார்
யாழ்ப்பாணம்

### மனம் இதுதானா?...

கண்டவுடன் தாவும்
கடிவாளம் போட்டாலும்
ஓடும்—கட்டாந் தரையில்
கனவுகாணும்—
கனதூரம் போக
ஆசை கொள்ளும்
தோழமையோடு
ஏழ்மை பேசும்—
எல்லாம் இருந்தும்
இல்லாத
ஒன்றிற்காக எங்கும்
இதுதானே மனம்.

பா.ஜசிந்தா
உரும்பிராய் வடக்கு

பெண்ணே!
உன்னைப் பார்ப்பதற்கு
நீயே! காரணமாகி விடுகிறாய்.
யாழ்.

### இமயம் தொட...

உனக்கான வாழ்வில்
உன்னைத் தொலைத்துவிட்டு
ஏங்குகின்றாயா?
வாழ்வென்பது
உனக்கானது!
உண்மையானது!
இன்று அழுவாய்
நாளை சிரிப்பாய்
இதுவே நியதி

மாவை. நா.கஜேந்திரா

### ஆண்டொன்று ஆனபோதில்...

பேரவல ஒலிகள் வானில் மோதி
பேரிடியாய் முழங்கிட
மின்னிடும் அகல்விளக்கைப்- பல
மின்னல்கள் ஏற்றி வைத்து
அள்ளிவைத்த நீரை மேகம்
அழுது தீர்த்ததோ கனமழையாய்
ஆண்டொன்று ஆனபோதில்
என்று வீசும் வசந்தக் காற்று
என்றோ!
அழுதாள் இயற்கை அன்னை



# மௌனத்தின் தேடல் - 20

### கதியற்ற தாயிவள்

வன்னி மண் பரப்பினிலே
நெஞ்சினில் சுமந்த பிள்ளை
நீள் துயிர் கொண்டதனால்
விஞ்சுகின்ற வேதனையில்
வாய்விட்டுக் கதறுகின்றாள்
கதியற்ற தாயிவள்

அல்வாயூர்
சி.சிவநேசன்

### புதைகுழி

எத்தனை சோகம் எம்மவர் மனங்களில்
சொல்லொணாத் துயரமம்மா
உன் கதறல் கேட்குதம்மா
புதைகுழியிலிருக்கும் உன் மகன்—இன்று
உன் குரல் கேட்டுக் கண்ணீர் வடிக்கின்றான்

க.நிறோஜலா
கரவெட்டி தெற்கு

### தாயுள்ளம்

அன்று மார்பில் வேல் வாங்கி
உயிர் மாண்டான் வீரத்தாய் மகன்
இன்றோ காணாமற் போனோர் பட்டியலில்
இடம் பிடித்துள்ளான் இந்த ஏழைத்தாய்மகன்
நீதி கேட்டு கதறுகிறது தாயுள்ளம்
கடவுளே கல்லுருவில் மௌனமாய்

பா.துஷ்யந்தி
வலி.தென்மேற்கு

### கோடி கோடி செல்வம் குவித்தென்ன வாழ்வினில்...

கோடி கோடி செல்வம்
குவித்தென்ன வாழ்வில்
அன்பால் தேடிய செல்வமதை
கூவி வந்த குண்டு மழை
குதறி தள்ளியதே
அன்னையவள் ஓடினாள்
ஓலமிட்டாள்
தேடினாள் செல்வ மகனின் உடலை
தேம்பினாள்
நாள் தோறும் வாடினாள் நினைவால்
உருகும் மெழுகானால்...

கயாநந்தி
சந்நிதி

### கண்ணீரில் கரையொதுங்கு...

நான் பெற்றவனே
உன்னைத் தொலைத்துவிட்டு
ஏன் இன்னும் வாழுகின்றேன்
என் கண்ணீரிலாவது
நீ கரையொதுங்குவாய்
என்று!
காத்திருந்து
கதறுகின்றேன்
ஒரேயொரு முறை
எனக்காக வந்துவிடு
என் ராசாவே...!

வி.பாரதி
அச்சுவேலி வடக்கு

தாயவள் கரத்திடை
தனையனின் நிழற்படம்
அவளது அணைப்பினில்
அவன் படம் உறங்கிடும்
சாவதன் கரத்திடை
அவனது உயிர்ப்படம்
மரணத்தின் அழைப்பினில்
மனிதமே அடங்கிடும்

கி.சரண்ராஜ்
யா/கொக்குவில்.இ.க.

காணாமல் போன
கண்மணிகள் எங்கே?
கதறுகின்றோம்-எம்
காவலர்களுமில்லை
கடுகதியாய் தொடருமா?

து.துவாரகா
சங்கானை

### கல்லறையோர கண்ணீர்கள்

விடுதலை அறைகூவல்
விடுத்து விட்டார்கள்
விடியாத எம் மனங்கள்
அன்றைய பொழுதுகளை
அசை போடுகின்றது.
உறவுகளையிழந்து
கல்லறையோரத்தில்
எம் கண்ணீரினை
காணிக்கையாக்கிய காலம்
இனியும் எம்
வாழ்க்கைப் பயணத்திலே
இழுபட்டுத் தொடர வேண்டாம்.

வே.அகிலேஸ்வரன்
மருதங்கேணி

### யாரிடம் அழுகிறாய்

பத்து மாதம் சுமந்திருந்து
பிரிவுடனேயே பெற்றெடுத்தாய்
பாதி விநாடிகளிலேயே
பாய்ந்து வந்த எறிகணை வீச்சில்
பறிகொடுத்து விட்டாய்
இப்போ! யாரிடம் கதறியழுகிறாய்?
உன்னைப் படைத்த பிரம்மனிடமா?
இல்லை உன் உறவுகளை
பலி எடுத்த யமனிடமா?
கூறிவிட்டுக் கதறியழு
உன் கதறலில் நாமும் பங்கெடுக்க

மு.டிஷாந்தினி
தரம்:-11
யா/வட்டு.இ.கல்லூரி

தமிழன் என்பதால்
கானாமல் போனமைந்தனை
நினைத்துக் கதறிடும் அபலையே!
உன் கவலை இங்கே—உலகின்
கருத்தினில் படாது – இது
மனிதன் மரணித்தபூமி

சரண்ஜா
தாவடி

### புரியவில்லையா

வயிற்றில் சுமந்த
தாய் இன்று
நெஞ்சில் சுமந்து கொண்டு
கதறியழுவது
யாருக்காவது புரிகிறதா?


த.நிவேக்கா
யாழ்ப்பாணம்.

### மனவேதனை

தன் பாச மகனுக்காய் வாய் விட்டுக் கதறும்
அன்னையவள் நெஞ்சக் குமுறலை அறிந்ததா?
அந்த கலைந்து போன போர் மேகங்கள்
இவள் வேதனை போல் எத்தனை
பேர்க்கு உண்டு இந்த நாட்டிலே
வேண்டாம் இனி இந்தக் கொடிய யுத்தம்

சி.சுரேஸ்சன்ட்
அச்சுவேலி

# மௌனத்தின் தேடல்- 21



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 28.05.2010 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# Pulavar Video

Blu-ray Disc™

FULL HD 1080p

காலத்திற்கு காலம் புதுப்புதுப் பாணிகளை
புகுத்தி பல சாதனைகளைப் படைத்த

# புலவர் வீடியோ

கோண்டாவில்
2010 இன் HD தொழில்நுட்பத்தில்.

இதுவரை காலமும் DV, DVC Pro, DVCAM படைப்பின் ஊடாக DVD யில் பெற்றுக் கொண்ட நீங்கள்

இனிவரும் காலங்களில் HD Blu-ray Disc™

அதிஉயர் காணொளி இறுவெட்டுக்களில்

உங்கள் மங்கள நிகழ்வுகள் அனைத்தையும் உங்கள் உறவுகள்
புலத்திலும் நிலத்திலும் நேரடியாக காண்பதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்

இன்றல்ல நேற்றல்ல இற்றைக்கு 45 வருடங்களுக்கும் மேலாக
யாழ் மண்ணில் ஒலி ஒளி கலையில் தமக்கென ஓர் தனி முத்திரை பதித்தவர்கள்

மறவாதீர்கள் தொடர்புகளுக்கு : **புலவர் வீடியோ கோண்டாவில் வடக்கு**

# அபிவிருத்தித்திட்டங்கள் என்ற போர்வையில் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன

## அனுரபிரியதர்சன யாப்பா

(கொழும்பு)

அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருவதாக சுற்றாடல் அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அதிகளவில் இவ்வாறான இயற்கை வள சுரண்டல் இடம்பெற்று வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை பணியாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அபிவிருத்தி அடைந்த நாடுகள் நன்கு புரிந்து கொண்டுள்ளதாகவும் இதே நிலைமை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் பின்பற்றப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட நாடுகளே அதிகளவு இயற்கை அழிவுகளை மேற்கொண்டு வருவதாகவும் காபனீரொட்சைட் வெளியீடு தொடர்பில் உலகின் அனைத்து நாடுகளும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# சட்டவிரோத அவுஸ்திரேலிய பயணங்கள் தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு மேற்கொள்ளும் பயணங்களினால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து விளக்கமளிக்கப்பட உள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய சட்டவிரோதமான வழிகளைப் பயன்படுத்தி அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க மேற்கொள்ளப்படும் முயற்சியின் பாரதூரதன்மை குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்படும் பயணங்களின் யதார்த்த நிலைமையை மக்களுக்கு அம்பலப்படுத்துவதே தமது பிரதான நோக்கம் என இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கெத்தீ குலுக்மான் குறிப்பிட்டுள்ளார்.

இம் முறையில் ஆட்களை கடத்தும் நபர்கள் போலியான வாக்குறுதிகளை அளித்து மக்களை பிழையான வழியில் இட்டுச் செல்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டவிரோத பயணங்களின் ஆபத்து குறித்து தெளிவுபடுத்தும் பல்வேறு திட்டங்கள் இலங்கையில் முன்னெடுக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (6)

# வெள்ள நிவாரணப் பணியில் இராணுவ வீரர்கள்

(கொழும்பு)

வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நான்காயிரம் இராணுவ வீரர்களை பணியில் ஈடுபடுத்தியுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் நிவாரண நடவடிக்கைகளில் இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க குறிப்பிட்டார்.

வத்தளை,கெவரப்பிட்டி, முகத்துவரத்தை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு இராணுவத்தின் பொறியியல் சேவைப் படையணி ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் கொழும்பு கொட்டகேன, முகத்துவாரம் ஆகிய பிரதேசங்களில் தடைப்பட்ட கால்வாய்களைச் சுத்திகரிப்பதற்காகவும் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (2-3)

# நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிப்பதவியை ஒருவர் எத்தனை தடவையும் வகிக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது -வாசுதேவ

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒருவர் எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் வகிக்கக் கூடிய வகையில் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.


நிறைவேற்று அதிகார முறையை நீண்ட காலமாக எதிர்த்து குரல் கொடுத்த இடது சாரிகள் அதனை ஏற்றுக் கொள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியின் அதிகாரங்களை குறைப்பதற்கு ஆதரவு வழங்க முடியுமே தவிர அதனை அதிகரிக்கும் எந்த நடவடிக்கைக்கும் ஆதரவு வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து எதிர்காலத்தில் இடது சாரி கட்சிகள் விரிவாக கலந்துரையாடும் எனவும் இதேவேளை இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரும் அமைச்சருமான டியூ குணசேகர மற்றும் லங்கா சமசமாஜ கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வை.பி. தர்மசிறி ஆகியோர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை ஏற்படுத்தி நாடாளுமன்றத்திற்கு பொறுப்பு கூறும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

வரையறையின்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை வகிக்கும் வகையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுக்கு தம்மால் எந்த விதத்திலும் இணங்க முடியாது எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இடதுசாரி கட்சிகளான இலங்கை சமசமாஜ கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடது சாரி முன்னணி ஆகிய கட்சிகளுக்கு இம்முறை நாடாளுமன்றத்தில் ஐந்து ஆசனங்கள் கிடைத் துள்ளன நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவாக 144 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் நிலையில் இந்த இடது சாரிகள் ஐந்து ஆசனங் களையே கொண்டுள்ளன.



எவ்வாறாயினும் அரசியல் சாசனத்தில் திருத்தங்களை மேற்கொள்ள 150 என்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தேவைப்படுகிறது. இந்த இடது சாரி கட்சிகள் ஜனாதிபதி பதவிக்காலத்தை அதிகரிப்பதற்கு ஆதரவு வழங்கவில்லை எனில் அரசாங்கத்திற்கு ஆதரவான உறுப்பினர்களின் எண்ணிக்கை 139 ஆகக்குறையும் இதனால் குறித்த திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக 11 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை எதிர்க்கட்சிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள நேரிடும் என்றார். (2-6)

# உணவு முத்திரைகளை இரத்து செய்ய வேண்டாம்

## த.தே.கூட்டமைப்பு கோரிக்கை

உணவு முத்திரைகளை இரத்து செய்ய வேண்டாம் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இடம்பெயர் மக்களுக்காக விநியோகம் செய்யப்பட்டு வரும் உணவு முத்திரைகளை தொடர்ச்சியாக வழங்குமாறு அந்தக் கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா இடம்பெயர் முகாமிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 12 உறுப்பினர்கள் இந்த விஜயத்தில் கலந்துகொண்டனர்.

வன்னி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் தேவைகள் ஆகியன தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை தயாரித்து அதனை இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் உதவி வழங்கும் நிறுவனங்களுக்கும் சமர்ப்பிக்க உள்ளதாகவும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (2-6)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விசேட வைத்தியர் குழு!

(கொழும்பு)

வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தொற்று நோய்கள் பரவுவதை தடுக்கும் நோக்கில் அப்பிரதேசங்களுக்கு விசேட வைத்தியக் குழுக்களை அனுப்பி வைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கம்பஹா, கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கே விசேட வைத்தியக் குழுவினர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த விசேட வைத்தியக் குழுவினர் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதுடன் தொற்று நோய்களிலிருந்து பொது மக்கள் எவ்வாறு தப்பிக்கொள்ளலாம் என்பது பற்றி ஆலோசனைகளையும் வழங்குவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் செய்திகளை வெளியிடும் சர்வதேச நிறுவன தலைவர்களை வெளியேற்ற தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் தகவல்களை வெளியிடும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களை நாட்டில் இருந்து வெளியேற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வடபகுதியில் முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் குடிநீர் வழங்குவது குறைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் வதிவிடப் பிரதிநிதி அறிக்கையொன்றை அனுப்பியிருந்ததாகவும் இதனையடுத்தே அரசாங்கம் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அமைப்புகள் இலங்கைக்குள் வருவதையும் அரசாங்கம் தடைசெய்துள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையில் பணியாற்றிய சர்வதேச தொண்டு நிறுவனங்களில் செயற்பாட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் நாட்டில் தங்கியிருக்க வீசா அனுமதியை நீடிக்காத நிலையில் பலர் இலங்கையில் இருந்து வெளியேறினர். (2-6)

# தொழுகையில் ஈடுபட்டிருந்த பக்தர்கள் மீது தாக்குதல்-பள்ளிவாசலும் சேதம்

## குருநாகல் பகுதியில் சம்பவம்


குருநாகல் மெல்சிறிபுர ,அம்பன் பொல பிரதேசத்தில் பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது குழுவொன்று தாக்குதல் நடத்தியதுடன் பள்ளிவாசலுக்கும் சேதம் ஏற்படுத்தியுள்ளதாக தெரியவரு கிறது.

சுமார் 200 பேர் வரை பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த போது சிலர் தாக்குதல் நடத்தியதால் பள்ளிவாசலில் இருந்தவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.சிலர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

20 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் இந்தப் பள்ளிவாசலை விரிவுபடுத்துவதற்காக முஸ்லிம்கள் தயாராகியுள்ளனர். இதற்கு அப்பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் அல்லாத குழுவொன்று எதிர்ப்பு தெரிவித்ததால் நிர்மாணப் பணிகள் இடை நிறுத்தப்பட்டன.

சமய விவகார அமைச்சு பள்ளிவாசலை விரிவுபடுத்துவதற்கு அனுமதி வழங்கியிருந்த நிலையில் சம்பவம் இடம்பெற்றுள்ளது.பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக குறித்த பள்ளிவாசல் அமைந்துள்ள பகுதியில் பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளனர். (2-6)

# ஜீ-15 நாடுகளில் அதிகளவு சந்தை வாய்ப்புக்கு இலங்கைக்குச் சந்தர்ப்பம்-ஜீ.எல்.பீரிஸ்



ஜீ-15 அமைப்பின் உறுப்பு நாடுகளில் கூடுதல் சந்தை வாய்ப்பைப் பெறுவதற்கு இலங்கைக்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஜீ-15 நாடுகளிடம் உதவிகளைப் பெறுவதைவிட இலங்கையின் உற்பத்திப் பொருள்களை மேலும் தரமுள்ளதாக்கி அவற்றுக்கான கூடுதல் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வது பற்றி 14-வது உச்சி மாநாட்டில் கவனம் செலுத்தப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

ஜீ-15 நாடுகளின் 14-வது உச்சி மாநாடு ஈரான் தலைநகர் தெஹ்ரானில் 3 நாட்களாக நடைபெற்றது.

இந்த மாநாட்டின் முக்கியத்துவத்தை விளக்கும் முகமாக அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் வெளிவிவகார அமைச்சில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்ததாவது,

ஜீ-15 நாடுகளைப் பொறுத்தவரை உலக சனத்தொகையில் 33 வீதத்தினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.25 வீதம் எண்ணெய் உற்பத்தியையும் கொண்டுள்ளதுடன் ஏற்றுமதித்துறையில் 27 வீதப்பங்களிப்பைச் செய்வதாக சுட்டிக்காட்டிய அமைச்சர்,உலகப் பொருளாதாரத்தில் முக்கிய பங்குவகிக்கும் 10 நாடுகளுள் இந்தியா, பிரேசில் ,மெக்சிக்கோ ஆகிய 3 நாடுகள் ஜீ-15 இல் இடம்பெறுகின்றமை விசேடஅம்சமாகுமெனக்குறிப்பிட்டார்.

உலகப் பொருளாதார நெருக்கடியின் போது அதனை இலங்கை எதிர்கொண்டுகையாண்டவிதத்தை ஜீ-15 நாடுகள் வெகுவாகப் பாராட்டியதாகக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், அந்தநாடுகள்கொண்டிருக்கும்கொள்கையை இலங்கை திறம்பட நிறைவேற்றி வருவதாக பெருமிதத்துடன் பாராட்டியதாகவும் தெரிவித்தார். மேலும்அனலின்மூலம்மின்சாரத்தை உற்பத்தி செய்வதைவிட இயற்கை வளங்களைக்கொண்டுமின்சாரத்தை உற்பத்தி செய்வது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை ஜீ-15 மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ,ஜீ-15 நாடுகள் ,ஜீ-8 நாடுகளுடன் நெருக்கமாகச் செயற்படவேண்டும் எனவும், உலக நிதி மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், பொருளாதாரநெருக்கடிகளைத்தவிர்க்கவும் முடியுமானவரையில் சர்வதேச நிதிஇயல்பைமறுசீரமைப்புசெய்யவேண்டும்எனவும்வேண்டுகோள்விடுத்தார்.

**Group of 15 (G-15)**

ஜீ-15 அமைப்பு 1989-ம் ஆண்டு செப்ரெம்பர்மாதம் அணிசேரா மாநாட்டின் ஒரு அங்கமாக உருவாக்கப்பட்டது.ஜீ-15 அமைப்பில் 18 வளர்முக நாடுகள்அங்கம்வகிக்கின்றபோதிலும் அதன் பெயர் மாற்றப்படவில்லை. ஜீ-15 என்றே அழைக்கப்படுகிறது.

அல்ஜீரியா ,எகிப்து,கென்யா ,நைஜீரியா ,செனகல் மற்றும் சிம்பாவே ஆகிய ஆபிரிக்க நாடுகளும் ; ஆஜென்ரீனா ,பிரேசில் ,சிலி,மெக்சிக்கோ, பெரு ,ஜமைக்கா மற்றும் வெனிசுவெலா போன்ற லத்தீன் அமெரிக்க நாடுகளும் இந்தியா, இந்தோனேசியா, ஈரான் ,மலேசியா மற்றும் இலங்கை ஆகிய ஆசிய நாடுகளுமாக மொத்தம் 18 நாடுகள் ஜீ-15 அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.









அண்மையில் கொழும்பில் இன்ராட் எக்ஸ்போ 2010 (INTRAD EXPO 2010) என்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இடம் பெற்றது.தேசிய வர்த்தக சங்கத்துடன் (NCCSL) பல அமைச்சுக்கள்,முதலீட்டுச் சபை இணைந்து நடத்திய இக் கண்காட்சி பல பகுதிகளாக நடத்தப்பட்டது.இதில் பல நாடுகளையும் சோந்த அரச மற்றும் தனியார் நிறுவனத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.இக் கண்காட்சியில் பிரதமர் டி.எம்.ஜயரத்ன உரையாற்றுவதையும், வெளிவிவகாரஅமைச்சர் பீரிஸ் மற்றும் பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.04 | 114.63 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 162.06 | 165.42 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 141.37 | 144.77 |
| சுவிஸ் பிராங் | 97.24 | 100.22 |
| கனேடிய டொலர் | 105.13 | 108.55 |
| அவுஸ்திரேலிய டொலர் | 92.42 | 95.23 |
| சிங்கப்பூர் டொலர் | 79.72 | 81.60 |
| ஜப்பான் யென் | 1.24 | 1.28 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.42 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.97 | |

## வர்த்தக செய்தித் துளிகள்

### ம.வங்கி-சுங்கத்திணைக்களம் ஒப்பந்தம் கைச்சாத்து

மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல்பிரிவு,பணம்தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியிடல் என்பன தொடர்பாக சந்தேகத்துக்குரிய ஆட்களைப்புலனாய்வு செய்வதற்கும் வழக்குத் தொடர்வதற்கும் வசதியளிக்கக் கூடிய தகவல்களை பரிமாறிக்கொள்ளும் விதத்தில் சுங்கத் திணைக்களத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

### செலான் இலாபம் 323% அதிகரிப்பு

2010ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் செலான் வங்கியின் இலாபம் 185.9 மில்லியன் ரூபாய் எனவும், கடந்த நிதியாண்டில் இதே காலாண்டில் 43.9மில்லியனாக இருந்த இலாபம் தற்போது 323% அதிகரிப்பைக் காட்டியுள்ளதாகவும் வங்கியின் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பார்கிளேஸ் வங்கியின் முக்கிய பணிகள் இந்தியாவுக்கு மாற்றம்




பிரிட்டனில் டேவிட் கமரூனின் புதிய கன்சர்வேட்டிவ் கட்சி பதவியேற்ற கையோடு வங்கித்துறைக் கட்டுப்பாடுகள்மற்றும்வரிவிதிப்பைத்தீவிரமாக்கியுள்ளது.

இதனால் பிரிட்டனின் பிரபலமான பார்க்கிளேஸ் வங்கி தனதுசெயற்பாடுகளை இந்தியாவுக்கு மாற்றிக்கொள்ளத் தொடங்கியுள்ளது.இதன்முதற்கட்டமாக பிரிட்டனின் நோர்தம்ரென் நகர அலுவலகத்தில் இருந்து 140 முக்கிய பணிகளை மாற்றியுள்ளதாகவும்;இந்தியா வசதியான நாடாகவுள்ளதால் ஏற்கனவே சேவையைத் தொடங் கியுள்ளோம் எனவும் வங்கி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஏ.ரி.எம்மை முதலில் அறிமுகப்படுத்திய வங்கி இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4235.69 | (12.68) |
| மிலங்கா விலைச்சுட்டி | 4762.37 | (49.85) |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1780.94 | |

***உயர்வடைந்த பங்குகள்***: நெஸ்ரல் லங்கா ,ஹேறாலீஸ் பிஎல்சி,த புக்கிட், த கொழும்பு லான்ட்&பில்டிங் கம்பனி ,எம்.ரி.டி.வோல்கர்.

***சரிவைக் காட்டிய பங்குகள்***: டயலொக் ரெலிகொம் ,ரான்ஸ் ஏசியா , சிறிலங்கா ரெலிகொம் ,ஏசியன் ஹோட்டல்ஸ் ,என்வெயர்மென்டல் றிசோசஸ்.

## 3 ஜி அலைவரிசை ஏலம் வாயிலாக அரசுக்கு 67,719 கோடி வருவாய்

### இந்திய அரசின் நிதிப்பற்றாக்குறை குறையும்

மூன்றாவது தலைமுறையினருக்கான செல்போன் அலைவரிசை(3 ஜி ஸ்பெக்ட்ரம்)ஒதுக்கீட்டு ஏலம் வாயிலாக இந்திய மத்திய அரசுக்கு 67 ஆயிரத்து 719 கோடி இந்திய ரூபாய் வருவாய் கிடைக்கவுள்ளது.

இது எதிர்பார்த்த தொகையைக் காட்டிலும் (ரூ.35,000 கோடி) சுமார் 2 மடங்கு அதிகமானதாகும். இதையடுத்து இந்திய மத்திய அரசின் நிதிப்பற்றாக்குறை ஓரளவு குறையும் என தெரிவிக்கப்படுகிறது.

**பார்தி ஏர்டெல்**

அதிகவட்டங்களில் 3ஜிசேவையை அளிப்பதற்கு உரிமம் பெற்றுள்ள நிறுவனங்களுள் பார்தி ஏர்டெல் மற்றும் அனில் அம்பானிதலைமையின்கீழ்ச் செயற்படும்ரிலையன்ஸ்கம்னிக்கேஷன்ஸ்ஆகியநிறுவனங்கள்முன்னிலை வகிக்கின்றன. இவ்விரு நிறுவனங்களும் தலா 13 வட்டங்களில் சேவை அளிக்கும்வாய்ப்பைப்பெற்றுள்ளன.

இந்நிறுவனங்களுக்கு அடுத்தபடியாக ஏர்செல் நிறுவனம் 12 இடங்களிலும்,ஐடியா செல்லூலார் நிறுவனம் 11 வட்டங்களிலும் 3 ஜி சேவை அளிக்க உரிமம்பெற்றுள்ளன. வோடபோன்,டாட்டா டெலி சர்விஸ் ஆகிய நிறுவனங்கள் தலா 9 வட்டங்களில் இந்தச்சேவையைஅளிக்கும்.எஸ்டெல் நிறுவனம் 3 வட்டங்களுக்கு உரிமம் பெற்றுள்ளது. எடிசலாட் மற்றும் வீடியோகான் ஆகியநிறுவனங்கள் எந்த வட்டத்திலும் 3ஜி சேவையை அளிப்பதற்கான ஒப்பந்தப்புள்ளியில் வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




பார்திஏர்டெல்,வோடபோன்மற்றும் ஏர்செல் ஆகிய 3 நிறுவனங்கள்தமிழ்நாட்டில் 3 ஜி செல்போன் சேவையை அளிப்பதற்கான ஒப்பந்தப் புள்ளியில் வெற்றிபெற்றுள்ளன. தமிழ்நாட்டில் இந்த ஏலத்தின் மொத்த மதிப்பு 4,394.82கோடிஇந்தியரூபாயாகும்.

மூன்றாம் தலைமுறையினருக்கான அலைவரிசை ஒதுக்கீட்டிற்காக அதிக உரிமக் கட்டணம் செலுத்துவதில் பார்திஏர்டெல்நிறுவனம் முதலிடத்தில் உள்ளது. இந்நிறுவனம் 13 வட்டங்களுக்குமாக மொத்தம் ரூ. 12,295 கோடி செலுத்துகின்றது. வோடபோன் மற்றும் ரிலையன்ஸ் கம்னிக்கேஷன்ஸ் ஆகிய நிறுவனங்கள் முறையே ரூ.11,617 கோடிமற்றும் ரூ.8,585 கோடி செலுத்தவுள்ளனஎனதகவல்தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஆ.ராசா தெரிவித்தார்.

## தமிழ்நாடு கர்நாடகாவில் 30ஆயிரம் கோடி முதலீடு

தமிழ்நாட்டைச் சேர்ந்த பல நிறுவனங்கள் கர்நாடக மாநிலத்தில் அதிகளவு முதலீடு செய்துள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் முனனணி நிறுவனங்கள் அங்கு சுமார் ரூ.30 ஆயிரம் கோடி முதலீடு மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது. நடப்பாண்டில் தமிழக நிறுவனங்களின் முதலீடு மேலும் அதிகரிக்கும் என கர்நாடக தொழில்துறை அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.வரும் ஜுன் மாதம் 3-ம் திகதி பெங்களூரில் சர்வதேச முதலீட்டாளர் மாநாடு நடைபெறவுள்ளது குறித்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தின் இந்தியாசிமெண்ட்ஸ் நிறுவனம் கர்நாடகாவில் ரூ.2,100 கோடிமுதலீட்டில்ஒருசீமெந்துஆலையை அமைக்க உத்தேசித்துள்ளது. இதே போல் மற்றொரு தமிழக நிறுவனம் சூரானா இண்டஸ்ரீஸ் 10,000 கோடி முதலீட்டில் ஒருங்கிணைந்த உருக்கு ஆலையைநிறுவமுடிபுசெய்துள்ளது.

கு.முருகதாஸ்

# கோண்டாவில் தில்லையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்


## 35 வது வருடாந்த மஹோற்சவத்திருவிழா

# 8ஆம் திருவிழா அன்னைக்கு பட்டாபிஷேகம்

**வைகாசித்திங்கள் 9 ஆம் நாள் (23.05.2010)**

காலை 6.00 மணி அபிஷேகம், 7.30 மணி மூலஸ்தானப்பூஜை, 8.00 மணி ஸ்தம்ப பூஜை, 8.30 மணி வசந்தமண்டப பூஜை, 10.00 மணி அம்பாள் வீதியுலா வரும் காட்சி.

மாலை 4.00 மணி சாயரட்ஜை பூஜை, 4.30 மணி ஸ்தம்ப பூஜை, 5.00 வசந்தமண்டப பூஜை, 6.30 அம்பாள் வீதியுலாவரும் அருட்காட்சி இடம்பெறும்.




## மலர்தூவி வாழ்த்திடம்மா மஹோற்சவ நன்னாளிலே

வெண்பா

கோண்டாவில் வடபால் கோயிலுறைந்தே ஆண்டருளும்
வேண்டுவார் வரமருளும் தில்லையம்பதித் தாயம்மா
விடையேறியோன் பாகமான வித்தகியே! சிவகாமியே
கடைக்கண் பாரம்மா கனிந்து !

விருத்தம்

மனதிலிடை பாரங்கள் மருந்தாலும் குறையாதம்மா !
அனலிடை மெழுகாகி உருகினாலும் தீராதம்மா!
தினமுனை காணாவிடின் தேகமெல்லாம் கனக்குதம்மா!
கணமுன்னை மறவாத காட்சியாய் வாருமம்மா!

தித்திக்கும் பெயருனக்கு தீந்தமிழ் பதியுனது
எத்திக்கும் புகழ் பேசும் எழில் இராஜ கோபுரமுனது
சித்திக்கும் கருமங்களில் சிறப்போங்கும் செயலுனது
எத்துன்பம் வந்தாலும் ஏற்றருளும் பாங்குனது!
சிவனோடு பாகமாகி சேர்ந்தென்றும் இருப்பவளே
அவலங்கள் நிறைந்திங்கு அலைகின்ற எங்களையும்
புவனத்தில் நின்போல் பிரியாது இணைத்திடவே
சிவகாமியே எழுந்தருளி சுகமனைத்தும் தந்திடம்மா!

தலமதிலே சிறப்பெல்லாம் தகுமிசைக்கு சொல்லெடுத்து
புலவரெல்லாம் பாடி நிற்கும் பேறனைத்தும் கொண்டவளே
நலமுடனே நாம் வாழ நாடியுனை தொழுகின்றோம்!
மலர்தூவி வாழ்த்திடம்மா மஹோற்சவ நன்நாளிலே....
ஓம் சக்தி! ஓம் சக்தி !! ஓம் சக்தி !!!



## இசைவேந்தர்களின் நாதமழை

நல்லையூர் பிச்சையப்பா ரஜீவன் குழுவினர்
இணுவையூர் N.R. கோவிந்தசாமியின் புதல்வர்கள்
நாச்சிமார்கோவிலடி S.T. புஷ்பராணி குழுவினர்
கோண்டாவில் ஆனந் கணேஷ் குழுவினர்
சுதுமலை நடராஜசுந்தரம் குழுவினர்

**அனைவரும் வாரீர் அன்னையின் பேரருள் பெறுவீர்**

**ஈழத்து இசை வேந்தர்களின் நாதமழையில் நனைவீர்!**

**(மாலை 4.30 மணிமுதல் இரவு 9.00 மணி வரை)**

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி
ஓம் சாந்தி

**8 ஆம் திருவிழா உபயகாரர்**
**K.P. புலவர் குடும்பத்தினர்**
**புலவர் வீடியோ, கோண்டாவில்.**

## தெரியாம உன்னை காதலிச்சிட்டேன்

பிரியதர்ஷனின் உதவியாளர் விஜய் ''மதராச பட்டினம்'' படத்தை இயக்கி வருகிறார். இன்னொரு உதவியாளர் ஷிவா இயக்குனராக அறிமுகம் ஆகிறார். ''தெரியாம உன்னை காதலிச்சிட்டேன்'' என்பது படத்தலைப்பு. சென்னை 28, நாடோடிகள் படங் களில் நடித்த வசந்த் விஜய் ஹீரோ. அவருக்கு ஜோடி தேர்வு நடக்கிறது. அடுத்த மாதம் இறுதியில் ஷூட்டிங் தொடங்க உள்ளது.

## அஜித் ரசிகராக விஜய்

ஐவர் படத்தில் நான்கு ஹீரோக்களில் ஒருவராக நடிக்கிறார் விஜய் ஆனந்த். ஒடியோ விளம்பரத்தை புதுமையாக வடிவமைத்தோம். இரண்டு நாய்கள் ஐபாடில் பாட்டுக் கேட்பது. ரோபோ. பின்லேடன். ஜப்பானிய பெண்கள். டாஸ் மார்க் குடிமகன்கள் ஆகியோரை இடம்பெற வைத்தோம். இந்த விளம்பரம் ரசிகர்களை ஈர்த்தது. ரஜினி.ராவ் பகதூர் நட்பு பிரசித்தமானது. அவர்களையும் பயன்படுத்தினோம். இது ரஜனியின் கவனத்தை ஈர்த்தது. ஐவர் படம் பற்றி விசாரித்ததாக அறிந்து மகிழ்ந்தேன் என்ற விஜய் ஆனந்த். நட்பின் மேன்மையை வலியுறுத்தும் படத்தில், அஜித் ரசிகராக நடிக்கிறார். தவிர படத்தில் உதவி இயக்குனராகவும் பணியாற்றுகிறார்.




# இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம்

திரை விமர்சனம்

சீறிப்பாயும் அரேபியக் குதிரை, இரண்டுக்கும் மேற்பட்ட துப்பாக்கிகள், அழகிய தொப்பி, அசத்தலான கோட்சூட், ஒன்றுக்கு மேற்பட்ட கதாநாயகிகள் என ஜெய்சங்கர் காலத்திற்குப் பின் தமிழ் சினிமாவில் கவுபாய் கலாசாரத்தை மீண்டும் கொண்டு வந்திருக்கிறார் இயக்குநர் சிம்புதேவன்.

இதற்காகவே இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம் படத்தை பாராட்டலாம். இந்த ஒரு காரணம் மட்டுமல்ல... நாம் இழந்த நம் சொந்தங்களையும் கூட இலைமறை காயாக ஆங்காங்கே ஞாகப்படுத்தி நம் உணர்வுகளைத் தூண்டி விட்டிருக்கிறார் வம்பு! மன்னிக்கவும் சிம்பு!

கதைப்படி கிழடு கட்டை என்போமே.... அதுமாதிரி வயதான நாசரை கிழட்டு கட்டை எனும் பெயரில் உலவ விட்டு அவரது ராஜ்யத்தின் கீழ் பல பகுதிகளை வாழவிட்டிருக்கிறார். அப்படி ஒரு அடிமைப் பகுதியில் வசிக்கும் சிங்கம் லோரன்ஸ், நாசரை எதிர்க்கிறார். இந்நிலையில் அவர் காணாமல் போக, சிங்கத்திற்கு ஆதரவானவர்கள் ஒன்றுகூடி, வேறு ஒரு ஏரியாவில் சிங்கம் கெட் -அப்பிலேயே இருக்கும் சிங்காரத்திற்கு சிங்கம் வேஷம் போட்டு அழைத்து வருகின்றனர்.

சிங்கம் மாதிரி கவுபாய் 'கெட்-அப்' கொடுத்து அழைத்து வரப்படும் மற்றொரு லோரன்ஸ் நிஜத்தில் பயந்தாங்கொல்லி. அவர் கிழட்டு கட்டை நாசரை எதிர்த்து ராஜ்ஜியத்தை கைப்பற்றினாரா, அல்லது அடிபணிந்து அடிமை மக்களை அடிமையாக்கினாரா ? என்பது மீதிக்கதை! இதனூடே பத்மப்ரியா, லட்சுமிராய், சந்தியா ஆகிய மூன்று நாயகிகளுடனும் லோரன்ஸ் சலிக்க சலிக்க டூயட் பாடி ஆடுவது கலர்புல் கனேபரம்!

இரண்டு லோரன்ஸ்களும் தங்கள் கவுபாய் பங்கை கலக்கலாக செய்திருக்கின்றனர். அவரை மாதிரியே கதாநாயகிகள் பத்மப்ரியா, லட்சுமிராய், சந்தியா உள்ளிட்டவர்களும் தங்கள் பணியை சிறப்பாக செய்திருக்கிறார்கள். கலக்கல் கவர்ச்சி மூலம் உடம்பை சிலிர்க்க வைக்கிறார்கள். நாயகர், நாயகிகளைப் போன்றே வில்லன் நாசர், வி.எஸ்.ராகவன், மனோரமா, டெல்லிகணேஷ், சாய்குமார், எம்.எஸ். பாஸ்கர், சாம்ஸ் உள்ளிட்டவர்களும் சபாஷ் சொல்ல வைக்கின்றனர்.



அதிலும் செவ்விந்தியராக வரும் எம்.எஸ்.பாஸ்கரும், அவரது மொழிபெயர்ப்பாளராக வரும் சாம்சும், அவர்கள் பேசும் பாஷையும் செம காமெடி....சரவெடி! இயற்கை உபாதைகளை எல்லாம் காமெடி ஆக்க முயற்சித்திருப்பது உள்ளிட்ட ஒரு சில உவ்வே விடயங்கள் தவிர, இரும்புக் கோட்டை முரட்டு சிங்கம் ஓ.கே.

ஜி.வி.பிரகாஷ்குமாரின் இசையும், அழகப்பனின் ஒளிப்பதிவும், முத்துராஜின் கலை இயக்கமும் இப்படத்திற்கு பெரிய பலம். சிம்புதேவனின் இயக்கத்தில் 23 ஆம் திகதி புலிகேசி அளவு இரும்பு கோட்டை முரட்டு சிங்கம் இல்லை என்றாலும்... மோசமும் இல்லை.

இரும்புக் கோட்டை முரட்டு சிங்கம் :

முரட்டுக்கோட்டை இரும்பு சிங்கம்!




பட்டாசு கம்பனி முதலாளியின் வாரிசு சரண்யா. அவரை சத்யராஜ் காதலித்து திருமணம் செய்து கொள்கிறார். சத்யராஜின் தங்கை திருமண விடயத்தில் இருவருக்கும் கருத்து வேறுபாடு வருகிறது. இந்நிலையில் சத்யராஜின் தங்கை தற்கொலை செய்து கொள்கிறார்.

தங்கை சாவுக்கு சரண்யாவின் பணத்திமிர் தான் காரணம் என நினைத்து தானும் பணக்காரனாகி அவரை பழிவாங்க புறப்படுகிறார் சத்யராஜ். உள்ளூர் அமைச்சரிடம் சேர்ந்து கோடி கோடியாக சம்பாதிக்கிறார். பட்டாசு தொழிற்சாலை எரிந்து விட்டதால் ஏழையாகி விடுகிறார் சரண்யா. பூ விற்று வாழ்கிறார். அவரது ஏழ்மையைப் பார்த்து சந்தோஷப்படுகிறார் சத்யராஜ்.

இந்த நேரத்தில் சத்யராஜிடம் அடியாளாக வந்து சேர்கிறார் சுந்தர்.சி. அவருக்கு சேவை செய்து அன்பைப் பெற்று சிஷ்யனாகிறார். ஒரு கட்டத்தில் சரண்யாவை தீர்த்துக் கட்ட சத்யராஜ் ஆள் அனுப்பும் போது சரண்யாவை காப்பாற்றுகிறார் சுந்தர். அதன் பின்னர் தான் தெரிகிறது அவர் சரண்யாவின் தம்பி என்று.

சின்ன வயதில் காணாமல் போன தம்பி அக்காவின் நிலையைக் கேள்விப்பட்டு சத்யராஜையும் சரண்யாவையும் சேர்த்து வைக்க வந்திருக்கிறார். ஆனால் சத்யராஜ் சுந்தரை எதிரியாகப் பார்க்கிறார். குருவும் சிஷ்யனும் மோதுகிறார்கள். வெற்றி பெற்றது யார்? சத்யராஜும் சரண்யாவும் சேர்ந்தார்களா? என்பது கிளைமாக்ஸ்.

சத்யராஜும் சுந்தர்சியும் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டும் சவால்விட்டும் கொண்டும் படத்தை ஜாலியாக கொண்டு செல்ல முயல்கிறார்கள். சவாலுக்கு சவால், எத்தனுக்கு எத்தன், வில்லாதி வில்லன் என அவர்கள் போடும் ஆட்டத்தை ரசிக்கலாம். அதேநேரம் சில இடங்களில் கடுப்பூட்டுகிறது.

ஸ்ருதி கவர்ச்சியாக வந்து சுந்தரை காதலித்து வெளி நாட்டு கடற்கரையில் டூயட் பாடி தன் பங்கை செய்கிறார். சந்தானம் சிரிக்க வைக்கிறார். முறைப் பெண் ஸ்ருதியைக் கவர சுந்தர் மூலம் அவர் போடும் திட்டம் சுந்தருக்கே சாதகமாக முடிவதும் இவர் தவிப்பதும் சிரிப்பு.

'வாங் கோண்ணா' பாட்டில் கிரண் கவர்ச்சியாக வந்து போகிறார். 'கதற கதற காதலித்தேன்' பாட்டு இளைஞர் களை ஒன்ஸ்மோர் கேட்க வைக்கும். தீனாவின் இசையில் பாடல்கள் குத்தாட்ட வகை. பின்னணி இசை காதை கிழிக் கிறது.

கவர்ச்சி, அக்ஷன், ஏட்டிக்கு போட்டி காட்சி என கலகலப்பான படத்தை தர முயற்சித்திருக்கிறார் இயக்குனர் ஷக்தி சிதம்பரம். பக்கம் பக்கமாய் வசனம், நீளும் காட்சிகள், லொஜிக்கே இல்லாத திரைக்கதை இவற்றை சரி செய்திருந்தால் முயற்சி திருவினையாக்கியிருக்கும்.

## விஜய் இனி சினிமாவில் விபூதி பூசக்கூடாது ரசிகர்கள் ஆத்திரம்



கிறிஸ்தவராக இருந்தாலும் எஸ்.ஏ. சந்திரசேகர் வாராவாரம் வடபழனி முருகன் கோயிலுக்கு செல்வதை வழக்கமாக கொண்டிருக்கிறார்.

ஆனால் அவர் மகன் விஜய் இதற்கெல்லாம் நேர் மாறாக இருக்கிறார் அதனால்தான் ரசிகர்கள் கொந்தளித்துப் போயிருக்கிறார்கள்.

தான் நடிக்கும் படங்களில் மட்டும் விபூதி, குங்குமத்தை அள்ளிப்பூசி நடிக்கிறார். விநாயகர், முருகன் என்று இந்து கடவுள்களையெல்லாம் வணங்குகிறார். நிஜத்தில் மட்டும் ஏன் இவற்றை வெறுக்கிறார்.

சினிமாவில் ஒன்று நிஜத்தில் ஒன்று என்று இனி அவர் இரட்டை வேசம் போடக்கூடாது. இனிமேல் அவர் சினிமாவில் விபூதி பூசி நடிக்கக்கூடாது. இந்துக் கடவுள்களை வணங்குவது போல் நடிக்கக் கூடாது என்றுரசிகர்கள் ஆத்திரப்படுகிறர்கள்.

## விறுவிறு சூட்டிங்கில் நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி!



ஏறத்தாழ 700 படங்களுக்கு மேல் நடித்திருக்கும் காமெடி நடிகர் குண்டு கல்யாணம் இயக்குநர் அவதாரம் எடுத்திருப்பது ஏற்கனவே தெரிந்த சங்கதிதான். எம்.ஜி. ஆரின் தீவிர விசுவாசியான குண்டு கல்யாணம் இயக்கும் படத்தின் தலைப்பு நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி.

குழந்தைகளை குஷிப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்படும் இப்படத்தில் குழந்தைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு தேவையான நல்ல கருத்துக்களும் அடங்கியிருக்கிறதாம். காட்டுக்குள் சுற்றுலா போகும் குழந்தைகள் அங்கே சிக்கிக் கொண்டு வெளியே வர முடியாமல் தவிக்கிறார்கள். எப்படி வெளியே வந்தார்கள் என்பதுதான் விறுவிறுப்பான" நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி" படத்தின் கதை. படத்தில் குண்டுக் கல்யாணத்தின் மகள் ஜனனி முக்கிய பாத்திரத்தில் நடிப்பதுடன், உதவி இயக்குநராகவும் பணியாற்றுகிறார்.

சத்யமங்கலம், மேட்டூர் காடுகளில் பாதுகாப்பான ஏரியாவில்தான் படப்பிடிப்பை நடத்த திட்டமிட்டிருக்கிறார் களாம். சூட்டிங் ஸ்பொட்டில் துருதுருவென படத்தில் நடிக்கப்போகும் வாண்டுகளுக்கு பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கும் குண்டு கல்யாணம் படத்தில் வன அதிகாரி கரக்டரில் நடிக்கிறார்.

குண்டு கல்யாணம் இயக்கும் இன்னொரு படமான "நாங்க புதுசா" மியூசிக் கம்போசிங் பணிகளும் விறு விறுப்பாக நடந்து வருகிறது என்து கூடுதல் தகவல்.

## அடுத்தடுத்து நஷ்டம்! இறங்கி வருவாரா விஜய்?



நடிகர் விஜய் நடிப்பில் வெளியாகி அடுத்தடுத்து தோல்வியை சந்தித்த படங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்களாம் தியேட்டர் அதிபர்கள். முன்னாள் ஹீரோக்கள் வரிசையில் இடம் பிடித்திருக்கும் விஜயின் படங்கள் சமீப காலமாக எதிர்பார்த்த அளவுக்கு ஓடவில்லை.

வேட்டைக்காரன், சுறா என அடுத்தடுத்து வெளியான படங்களை ஆர்வமுடன் கோடிக் கணக்கில் பணம் கொடுத்து வாங்கி திரையிட்ட தியேட்டர்கள் எல்லாம் நஷ்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளன. அதன் விளைவு விஜய்யின் அடுத்த படத்தில் நஷ்டத்தை ஈடுகட்டும் முயற்சியிலோ அல்லது திரையரங்க உரிமையாளர்களுக்காக ஒரு படத்தை நடித்துத்தரும் முடிவிற்கோ வரவேண்டும் என தியேட்டக்காரர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

அப்படி நடித்துக் கொடுக்காவிட்டால் விஜய் படத்துக்கு தடைபோடும் முடிவிலும் இருக்கிறார்களாம் தியேட்டர் அதிபர்கள் சங்கத்தினர். இறங்கி வருவாரா விஜய்?

# முல்லைப் பகுதியிலேயே அதிகளவில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன

## இராணுவ பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

மீள்குடியேறுவதற்காக எஞ்சியுள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் முல்லைத் தீவு பிரதேசத்தைச் சேர்ந்தவர்க ளாகும். இறுதிக்கட்ட யுத்தத்தின் போது புலிகள் தம்மிடமுள்ள அனைத்து மிதிவெடிகளையும் இப்பகுதியிலேயே புதைத்துள்ளனர்.

இதனாலேயே இங்குள்ள மதிவெடி களை அகற்றி மக்களை மீள்குடியேற்றுவ தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இராணு வப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமர சிங்க கூறினார்.

இப் பகுதியில் மிதிவெடிகளை அகற்ற ஆயிரத்து 200 இராணுவத்தினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

கடந்த ஒரு வருடத்தில் இரண்டரை இலட் சத்துக்கும் அதிகமான மக்கள் மீள்குடியேற் றப்பட்டுள்ளனர். வன்னியிலிருந்து ஒரு இலட்சம் மக்களே வருவர் என்று எதிர்பார்த் தோம். ஒரேயடியாக பெருமளவு மக்கள் வந்ததால் அவர்களுக்கு தேவையான வசதி களை அளிப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

ஆனால் அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்புடன் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது புலிகளால் புதுக்குடியிருப்பு பகுதியிலேயே அதிகமான மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதனால் அப்பகுதியில் மக்களை மீள்குடியேற்ற முடி யாதுள்ளது. இதனால் ஆயிரத்து 200 படைவீரர்கள் இங்கு மிதிவெடி அகற்றுவதற் காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

முழுமையாக மிதிவெடி அகற்றாமல் எவரும் அங்கு மீள்குடியேற்றப்பட மாட்டார்கள். முல்லைத்தீவில் மிதிவெடி அகற்றும் நட வடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் ஊடகவியலாளர்கள் எவருக்கும் அங்கு செல்ல அனுமதியில்லை.நிவாரணக் கிரா மங்களில் உள்ள மக்களை எவரும் சென்று சந்திக்கலாம் என்றார். (2-6)

# கொழும்பு பிரதான நீதவானை இடமாற்ற முயற்சி சட்டத்தரணிகள் எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான், சம்பா ஜானகி ராஜரட்னவை இடமாற்ற எடுக் கப்படும் முயற்சிக்கு எதிராக சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். சுமார் 300 சட்டத்தரணிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவை சந்தித்த சட்டத்தரணிகள் நீதவானை இடமாற்றக்கூடாது என்ற கோரிக் கையை முன்வைத்தனர்.

நீதவான் சம்பா ஜானகி ராஜரட்ன, நீதி மன்றங்களினதும் சட்டத்தரணிகளினதும் மதிப்பைப் பெற்றவராவார்.

இந்த நிலையில் ஜெனரல் சரத் பொன் சேகா மீது சுமத்தப்பட்ட சரணடைந்த புலிக ளை கொலை செய்ததாக தெரிவித்த தகவல் தொடர்பாக அண்மையில் நடைபெற்ற விசார ணையின் போது இந்த வழக்கை விசேட மான முறையில் நடத்த வேண்டும் என்றும் சரத் பொன்சேகாவுக்கு உரிய பாதுகாப்பை வழங்கவேண்டும் என்றும் உத்தரவிட்டிருந் தார்.

அத்துடன் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர் என்ற அடிப்படையில் பொன்சேகா இராணுவத்தின் பாதுகாப்பில் அல்லாது நீதி மன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட வேண் டியவர் என்றும் தெரிவித்திருந்தார். (2-6)



பருத்தித்துறை தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கான பசுப்பால் வழங்கும் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் மாணவி யொருவருக்கு பால் ைபக்க ற் வழங்குவதையும் அருகில் பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா நிற்பதையும் படத்தில் காணலாம்.

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் இருநாள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஹருஹிகோ குரோடா அரசின் அழைப்பின் பேரில் இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 26 ஆம் திகதி இலங்கை வருகின்றார்.

அவர் இவ்விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை நேரில் சந்தித்து முக்கியமான பல விடயங்கள் குறித்துப் பேசுவார் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது. இவ்விஜயத்தின் போது குரோடா வட மாகாணத்துக்கும் செல்ல உள்ளார்.

அவர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் கிளிநொச்சியில் மின் திட்டம் ஒன்றை யும் மன்னாரில் நீர் விநியோகத்திட்டம் ஒன்றையும் சம்பிரதாய ரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் இலங்கையில் தற்போது 40 அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. அவற்றையும் இயலுமானவரை அவர் சென்று பார்வையிடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (2-6)

# சுவிற்ஸர்லாந்தில் மறைந்திருந்த இலங்கைப் பெண் கைது

(கொழும்பு)

சுவிற்ஸர்லாந்தில் மறைந்திருந்த இலங் கைப் பெண் ஒருவரை ஜெர்மனிய பொலிஸார் கைது செய்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த பெண் ஜெர்மனிக்குச் சென்று அங்கிருந்து சுவிற்ஸர்லாந் திற்கு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுவிற்ஸர் லாந்தின் பேர்ன் நகரில் மறைந்தி ருந்த போது குறித்த பெண் கைது செய்யப் பட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தினரால் தமக்கு கொலை மிரட்டல் விடுக்கப் பட்டதாகத் தெரி வித்து, குறித்த பெண் ஜெர்மனியில் சரணாகதிய டைந்துள்ளார்.

இவ்வாறு 20க்கும் மேற்பட்டவர் கள் அண்மையில் இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரியுள்ளதாக திவயின சுட்டிக் காட்டியுள்ளது. (2-6)



# PRONTO Lanka (PVT)LTD

International Company

The Largest Domestic Courier Service in Sri Lanka

இலங்கையில் மிகப்பெரிய, உள்நாட்டு பொதிகள் மற்றும் முக்கியமான ஆவணங்களுக்கான துரிதசேவை

யாழ். மற்றும் வன்னி மாவட்டத்திலிருந்து இலங்கையின் எப்பகுதிக்கும் ஏனைய மாவட் டங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கும் 24 மணி நேரத்திற்குள் விநியோகம்.




- உத்தரவாதம்
- பாதுகாப்பு
- விரைவு
- அதிசயமான குறைந்த கட்டணம்
- வீட்டு வாசலில் சேவை (Spot Service)
- சனிக்கிழமைகளிலும் விசேட சேவை
- தொலைபேசி மூலமான தொடர்பாடல்

எமது சேவை வடபிராந்திய மக் களுக்காக விசேடமாக யாழ்.மாவட் மக்களுக்காக மீண்டும் ஆரம்பிக்கப் பட்டது.

தொடர்பு கொள்ளவண்டிய முகவரி:-
PRONTO Lanka (PVT) LTD
217, 2ஆம் குறுக்குத்தெரு,
Off Hospital Road, Jaffna
T.P.: 021 222 4030,
077 376 9000


# மடோனா சிலையை உடைத்ததாக இலங்கையர் மீது குற்றச்சாட்டு

## இத்தாலியில் சம்பவம்

(கொழும்பு)

இத்தாலியில் மதுபோதையில் இருந்த இலங்கையர் ஒருவர் மடோனா மற்றும் குழந்தையின் சிலையை உடைத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக 20 ஆயிரம் யூரோ நட்டம் ஏற்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

51 வயதான இந்த இலங் கையர், முதலில் மெழுகுவர்த்தி தாங்கியை உடைத்ததாகவும் பின் னர் சிலையை உடைத்த தாகவும் மிலானில் உள்ள சான் திஸ்மா ரினிட்டா தேவாலய குரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மேற்படி குற்றச் சாட்டினைப் புரிந்த குறித்த இலங்கையர் இத்தாலியில் தங் கியிருப்பதற்கான ஆவணங்க ளைக் கொண்டிருக்க வில்லை என இத்தாலிய பொலிஸார் தெரிவித் துள்ளனர். (2-6)

# வற்றாப்பளை பொங்கலுக்கான போக்குவரத்து அனுமதி

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழாவிற்கு யாத்திரிகர்கள் செல்வதற்கான போக்குவரத்து அனுமதியை கிளி நொச்சி - முல்லைத்தீவு கட்டளைத் தளபதி வழங்கியுள்ளார் எனவும் இதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை பஸ் சாலைகளில் இருந்து இலங்கை போக்குவரத்து சேவை பேருந்துகள் மூலம் பய ணங்களை யாத்திரிகர்கள் மேற் கொள்ள முடியுமென இலங்கைப் போக்கு வரத்துச் சேவை பொது முகாமை யாளர், தெரிவித்துள்ளார். (6)

# கர்நாடக விமான நிலையத்தில் விபத்து ; பயணிகள் விமானம் வெடித்து சிதறியது

## 160 பேர் உடல்கருகிப் பலி



(மங்களூர்)

டுபாயில் இருந்து கர்நாடக மாநிலம் மங்களூருக்கு வந்த விமானம் விபத்துக்குள்ளானதில் 160 பேர் பலியாகினர்.

டுபாயில் இருந்து கர்நாடக மாநிலம் மங்களூருக்கு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமா னம் ஒன்று நேற்று அதிகாலை 2.30 மணி அளவில் புறப்பட்டு வந்தது. போயிங் 737 வகையைச் சேர்ந்த அந்த விமானத்தில் 163 பயணிகள்,4 குழந்தைகள் , 6 விமான ஊழியர்கள் ஆக மொத்தம் 173 பேர் இருந்தனர்.


சுமார் 4 மணி நேர நேரடி பயணத்துக்குப் பிறகு அதிகாலை 6.30 மணி அளவில் அந்த விமானம் மங்களூர் விமான நிலையத்தை நெருங்கியது. விமான நிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் அந்த விமானம் தரை இறங்க அனுமதித்தனர். போதிய வெளிச்சம் இல்லாததால் கவனமாக தரை இறங்குமாறு நிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் அறிவுறுத் தினார்கள்.

திடீரென விமானத்துக்கும் கட்டுப்பாட்டு அறைக்கும் இருந்த தொடர்புதுண்டிக் கப்பட்டது. விமானத்தில் திடீரென தீ பிடித்தது. அப்போது விமானம் விமான நிலையத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவுக்குள் தான் இருந்தது.

விமான நிலைய சுற்றுப்பகுதியை எட்டி இருந்த விமானம் தரை இறங்க சில வினாடிகள் இருந்த நிலையில் நிலை தடுமாறியது. புகை கக்கிய நிலையில் அந்த விமானம் அல்லாடியது. அதன் போக்கும் மாறியது.

இதை கண்டதும் விமான நிலைய , அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். இதற்கிடையே தீ பரவுவதற்குள் விமானத்தை தரை இறக்கி விடலாம் என்று விமானிகள் முயற்சித்தாக தெரிகிறது. ஆனால் விமானம் கட்டுப் பாட்டை இழந்தது.

விமான நிலையத்தின் புதிய ஓடு தளத்தில் இறங்குவதற்கு பதில் தவறுதலாக அருகில் விமானம் தரை இறங்கிவிட்டது. இத னால் மேலும் நிலை தடுமாறிய விமானம் இழுத்துச் செல்லப்பட்டு அருகில் உள்ள மலை அடிவார பகுதி மீது பலத்த சத்தத்துடன் மோதியது. மறுவினாடி விமானம் வெடித்து சிதறியது.




உறவினர்களை வரவேற்க வந்தவர்கள் இந்த கோர விபத்தை பார்த்து துடிதுடித்துப் போனார்கள். விபத்து குறித்து உடனடியாக மீட்புக்குழுக்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. உடனடியாக தீயணைப்புப் படை வீரர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.




விமான நிலையம் அருகில் உள்ள டெக்கான் பார்க் மற்றும் ரயில் பாதையிடையே விமானம் தீப் பிடித்தபடி கிடந்தது. முட்காடாக இருந்ததால் விமானத்தின் அருகில் செல்ல முதலில் மீட்புக்குழுவினர் கடுமையாக திணறினார்கள். இதனையடுத்து மீட்புப்பணிக்கு மத்திய தொழில் பாதுகாப்புப்படையைச் சேர்ந்த 150 வீரர்கள் வரவழைக்கப்பட்டனர்.

அவர்கள் ஏற்படுத்தி கொடுத்த பாதை மூலம் மீட்பு பணிகள் முடுக்கி விடப்பட்டன. சுமார் 25 அம்புலன்சுகள் தயார் நிலையில் நின்றன. தீயணைப்பு படை வீரர்கள் சுமார் 2 மணி நேரம் கடுமையாக போராடி தீயை அணைத்தனர்.

விமானம் மோதிய வேகத்தில் தீப் பிடித்து வெடித்து சிதறியதால் சம்பவ இடத்திலேயே பயணிகள் பிணமாகிப்போனார்கள். 160 பேர் பலியாகி விட்டதாக கர்நாடக முதல் மந்திரி எடியூரப்பா கூறினார்.

விமானத்தின் பின் பகுதியில் இருந்தவர்களில் 6 பேர் மட்டும் அதிசயமாக உயிர் தப்பினார்கள். அவர்கள் படுகாயங்களுடன் உயிருக்குப் போராடியபடி கிடந்தனர். ஒரு குழந்தையும் உயிருக்கு போராடியபடி கிடந்ததை கண்டு மீட்புக் குழுவினர் மீட்டனர்.

அவர்கள் 6 பேரும் மங்களூரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விமான விபத்துக்கான காரணம் என்ன என்பது பற்றி அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார் கள். போதிய அளவு வெளிச்சம் இல்லாததே விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.ஆனால் விமானம் தரை இறங்கி கொண்டிருந்தபோது இடது பக்க இறக்கையில் தீ பிடித்தாக நேரில் பார்த்த ஒருவர் கூறியுள்ளார். இது பற்றியும் அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள்.

போயிங் 737 ரக விமானங்களில் எல்லா நவீன வசதிகளும் உள்ள ஆபத்து காலத்தில் விமானத்தை தற்காத்து கொள்ளும் வசதிகளும் உள்ளன. தரை இறங்க முயற்சிக்கும் போது நிலமை சரி இல்லையென்றால் கூட அந்த விமானத்தை உடனடியாக மேலே கிளப்ப முடியும் . எனவே விமானியின் தவறான கணிப்பும் விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. (6)

## முன்கூட்டியே தென்மேற்கு பருவ மழை சென்னைவானிலை ஆய்வு மையம் தகவல்

(சென்னை)

தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு முன் கூட்டியே தொடங்க வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபர் தீவுப் பகுதிகளில் வழக்கமாக மே 20 ஆம் திகதி தென் மேற்கு பருவ மழை உருவாகும். ஆனால் இந்த ஆண்டு 4 நாள்களுக்கு முன் கூட்டியே உருவானது. இதனாலேயே லைலா புயல் உருவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதே போல் வழக்கமாக கேரளத்தில் ஜுன் முதுல் வாரத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கும்.ஆனால் இந்த ஆண்டு ஒரு வாரத்துக்கு முன்னதாக கேரளத்தில் பருவமழை தொடங்க வாய்ப்பு உள்ளது இதனால் தமிழகத்தின் கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களிலும் முன்கூட்டியே மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி ஆந்திர மாநிலம் மசூலிப் பட்டினத்துக்கு வடக்கே 50 கிலோ மீற்றர் தூரத்தில் மையம் கொண்டிருந்த லைலா புயல் வலுவிழந்து வடக்கு மற்றும் வடகிழக்கு திசையில் நகர்ந்து சென்றதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரி வித்தது.

இதனால் ஆந்திரத்தில் தெலங்கானா கடற்கரை பகுதிகளில் பல இடங்களில் நல்ல மழை பெய்துள்ளது. (6)

## நித்தியானந்தர் ஆசிரமத்திலிருந்து மனைவி,மகள்களை மீட்டுத்தரக்கோரிக்கை

(பாளையங்கோட்டை)

கடத்தப்பட்டு சாமியார் நித்தியானந்தரின் பிடதி ஆசிரமத்தில் அடைத்துவைக்கப்பட்டுள்ள தனது மனைவி ஆரோக்கியவிமலா மற்றும் மகள்களை மீட்டுத்தரக்கோரி ஜோர்ஜ் என்பவர் நெல்லை பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளார்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையைச் சேர்ந்த ஜார்ஜ் நெல்லை பொலிசில் அளித்துள்ள புகார் மனுவில் நித்தியானந் தரின் சீடர் ஒலேஷாவிடம் தனது மனைவி, மகள்களுக்கு மருத்துவ சிகிச்சை பெறச் சென்றேன்.

அப்போது தனது மனைவி, மகள்களை வசப் படுத்தி ஒலேஷா கடத்திச் சென்றுவிட்டார். அவர்களை அடைத்து வைத்துள்ளார். மனைவி , மகள்களை பார்க்க பிடதி ஆசிரமத்திற்கு சென்ற போது என்னை ஆசிரம நிர்வாகிகள் உள்ளே அனுமதிக்கவில்லை.

எனவே 4 ஆண்டுகளாக கர்நாடக மாநிலம் பிடதி ஆசிரமத்தில் அடைக்கப்பட்டுள்ள தனது மனைவி , மகள்களை மீட்டுத்தர வேண்டும் என்று புகார் மனுவில் கூறியுள்ளார். புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுப் பது குறித்து நெல்லை பொலிஸ் உயர் அதிகாரிகள் பரிசீலித்து வருகின்றனர். (6)

## பாரதச் செய்திகள்

## ஆந்திர புயலுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்வு

(ஐதராபாத்)



ஆந்திராவைத் தாக்கிய லைலா புயலுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அன்று வங்கக் கடலில் உருவான லைலா புயல் ஆந்திர மாநிலம் பாபட்லா அருகே வியாழக் கிழமை நிலை கொண்டிருந்தது. இதனால் அம்மாநில கடலோரப் பகுதியில் சூறைக்காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. 32 பேர் பலியாகினர். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் சுமார் 300 நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருளில் மூழ்கின. 30 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி சேதமடைந்தன. (6)

# ஒபாமா செல்போனில் என்ன இருக்கு?



பதவியில் இருக்கும் எந்த ஒரு அமெரிக்க ஜனாதிபதியும் தனது சொந்த செல்போனை பதவியில் இருக்கும் வரை பயன்படுத்த முடியாது. ஜனாதிபதி பேசும் பேச்சு அனைத்தையும் பாதுகாப்பு அதிகாரிகள் பதிவு செய்வார்கள். இந்த விதியை மீறி செல்போனும் கையுமாகத் திரிபவர் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா.

பில் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போது தனது சொந்த செல்போனில் இருந்து இரண்டு முறை மட்டுமே இ-மெயில், மெசேஜ் அனுப்பினார். புஷ் ஜனவரி 2001 ஆம் ஆண்டு தனது சொந்த செல்போனில் இருந்து ஒரு முறை இ-மெயில் அனுப்பினார். இவை அனைத்தையும் ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகள் கண்டு பிடித்துவிட்டனர்.



புஷ்ஷிடம் இருந்து செல்போனையே பறிமுதல் செய்துவிட்டனர். பொது வாழ்க்கையில் ஈடுபட்டதால் எனது தனிப்பட்ட வாழ்க்கை பறிபோய் விட்டது என்று பின்னர் வருந்தினார் புஷ்.

ஆனால் ஒபாமா ஓர் இ-மெயில் அடிமை. கையில் செல்போன் இல்லாமல் ஒரு நிமிடமும் அவரால் இருக்க முடியாது. அவருக்கு மிகவும் பிடித்தமான பிளாக்பெர்ரி செல்போனை ஜனாதிபதி மாளிகையிலும் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இன்னும் நான் எனது பிளாக் பெர்ரியை என்னுடன் தான் வைத்திருக்கிறேன். பாதுகாப்பு அதிகாரிகள் என் பேர்சனல் விடயத்தில் தலையிட்டு என் செல்போனைப் பிடுங்கப் பார்க்கின்றனர். நான் அதை அனுமதிக்கமாட்டேன் என்றார்.

அமெரிக்க நடிகை ஸ்கார்லட் உடன் மொபைல் அரட்டை செய்வது ஒபாமா வழக்கம். பேர்சனல் செல்போன் வைத்திருப்பது உலகச் செய்திகளை நேரடியாகத் தெரிந்துகொள்ளவும் மக்களுடன் எளிதில் தொடர்பு கொள்ளவும் வசதியாக இருக்கிறது என்கிறார் அவர்.

ஒபாமாவுக்கு மை ஸ்பேஸ் என்னும் பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளத்தில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட நண்பர்கள் உள்ளனர். பேஸ்புக்கில் மட்டும் 3.7 மில்லியன் ஆதர வாளர்கள் ஒபாமாவுடன் தொடர்பில் இருக்கின்றனர். ஒருமுறை ஒபாமா விமான நிலையத்தில் நடந்து சென்று கொண்டிருந்தபோது கை தவறி அவரது செல்போன் கீழே விழுந்துவிட்டது. அதைப் பாதுகாப்பு அதிகாரிகள் குனிந்து எடுக்கு முன் குபீரென புலிப் பாய்ச்சலில் கவர்ந்து எடுத்தார் ஒபாமா. என்னமோ வில்லங்கம் இருக்கு.

## பீங்...பீங்...ஒன் மெசேஜ் ரேசீவ்ட்

அநேகமாக இன்று உலகில் அதிக தகவல் பரிமாற்றங்கள் எஸ்.எம்.எஸ்கள் மூலமாகத்தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. "கீ பாட்" கிழியக் கிழியப் பறக்கும் பல எஸ்.எம். எஸ்கள் பல சமயங்களில் வில்லங்க வில்லன் அவதாரமும் எடுப்பது உண்டு.

மலேசியாவைச் சேர்ந்த ஒருவர் இன்னும் ஒரு நாளில் நீ வீட்டுக்கு வரவில்லை என்றால் நான் விவாகரத்துக்கு விண்ணப்பித்து விடுவேன்! என்று தன் மனைவிக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பினார்.

மனைவியிடம் இருந்து எந்தப் பதிலும் வராததால் விவாகரத்து விண்ணப்பத்தையும் எஸ்.எம்.எஸ்ஸிலேயே அனுப்பினார். வழக்கு விசாரணையின் போது அது சும்மா எஸ்.எம்.எஸ் தானே என்று அசால்ட்டா இருந்து விட்டேன்! என்று மனைவி சமாளிக்கப் பார்க்க புரியும் படி இருந்தால் எஸ்.எம்.எஸ்.ஸில் விவாகரத்து விண்ணப்பம் அனுப்புவது செல்லும்! என்று கணவனுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளித்தது நீதிமன்றம்.

வளைகுடா நாடுகளில் பணவீக்க நெருக்கடி கால கட்டத்தில் அங்கு வேலை பார்த்த இலங்கையர்கள் உட்பட பிற நாட்டவர்களுக்கு சீட்டு கிழிக்கப்பட்ட விடயத்தை நிறுவனங்கள் எஸ்.எம்.எஸ். மூலமாகவே அனுப்பின. இன்றைய திகதிக்கு கைரேகை ஆயுதங்கள் என எந்தத் தடயங்களும் இல்லாமல் எஸ். எம்.எஸ்கள் மூலமே ஒரு குற்றத்துடன் தொடர்புடைய மாஸ்டர் மைண்ட் முதல் அடிமட்ட அடியாள் வரை அனைவர் கையிலும் விலங்கு மாட்டிவிடுகிறார்கள். ஒவ்வொரு எஸ்.எம்.எஸ்ஸும் ஏதோ ஒன்றுக்கு ஆதாரம் தான்!




## 'செல்' எனப்படுவது யாதெனில்...

**செல்போன்கள் குறித்த சில நம்பிக்கைகளும், அதன் பின்னணி உரிமைகளும்...**



♦ விமானப் பயணத்தில் செல்போன் பயன்படுத்தினால் அதன் சிக்னல்கள் விமானத்தின் மின்னணுக் கருவிகளின் செயற்பாட்டில் குளறுபடி உண்டாக்கி விமானத்தையே செயல் இழக்கச்செய்யும்!

மொபைல் போனின் சிக்னல்கள் விமானத்தின் சிக்னல்களுக்குக் குழப்பதை ஏற்படுத்துகின்றன என எந்த ஆராய்ச்சி முடிவுகளும் சொல்லவில்லை. இருப்பினும், ஒரு முன் எச்சரிக்கைக்காக இந்த வழக்கம் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது!

♦ பெற்றோல் நிரப்பு நிலையத்தில் செல்போன்களை உபயோசிப்பது தீ விபத்துக்களை உருவாக்கலாம்.

இதில் உண்மை இல்லை என்பதுதான் பலரது கருத்தும். செல்போன்களில் இருந்து உருவாகும் ஸ்டாடிக் எலெக்ரிக் சார்ஜ் எனப்படும் மின்சக்தியின் அளவானது, தீப்பொறியை உண்டாக்கும் அளவுக்கு இருக்காது என்று நிச்சயமாக சொல்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கு முன் பிரபல எண்ணெய் நிறுவனமான ஷெல், இது குறித்து எச்சரிக்கை விடுத்திருப்பதாக மேற்கோள் காட்டப்பட்டு உலகெங்கும் இ -மெயில்கள் பறந்தன. ஆனால், ஷெல் நிறுவனம் இதை மறுத்துவிட்டது!

♦ செல்போன்களைத் தொடர்ந்து உபயோகிப்பதால் அதிலிருந்து வெளியாகும் கதிர்வீச்சு, மூளையில் கட்டிகளையும் மூளைக் கான்சரையும் உருவாக்கும்! மொபைல் போன்களின் கதிர்வீச்சினால் மூளைக்கு ஏற்படுவதாகச் சொல்லப்படும் பாதிப்புக்கள் குறித்து உறுதியான ஆராய்ச்சி முடிவுகள் எதுவும் திட்டவட்டமாக வெளியாகவில்லை.

இருப்பினும் முன் எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டு கூடுமானவரையில் பாதுகாப்பாக நடந்துகொள்வது நலம் என்பதே ஆராய்ச்சியாளர்களின் கருத்து!

♦ நோக்கியா செல்போன்களில் பற்றரி சார்ஜ் மிகவும் குறைவாக இருந்தால் *3370# என்ற எண்களை டயல் செய்யுங்கள் .ஓரளவுக்கு பற்றரி சார்ஜ் ஆகும். அதைக் கொண்டு அவசரஅழைப்புக்கள் பேசலாம்.

இதுவும் பொய்யே சார்ஜ் குறைந்தால் ரீ-சாாஜ் தான செய்யவேண்டும.வேறு குறுக்கு வழிகள் எல்லாம் இல்லை.

## உலகின் முதல் எஸ்.எம்.எஸ்!

எங்கும் , எதிலும் , எப்போதும் தாங்கள் தான் முந்தி இருக்க வேண்டும் என்று நினைக்கும் அமெரிக்கர்கள் செல்போன்களை மட்டும் விட்டு வைப்பார்களா என்ன? உலக அளவில் செல்போன்களைப் பயன்படுத்துவதிலும் அமெரிக்கர்கள்தான் முன்னணியிலுள்ளனர்.



சராசரியாக ஒரு அமெரிக்கர் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட செல்போன்களைப் பயன்படுத்துகிறாராம். பரம ஏழையாக இருந்தாலும் அதிகபட்சம் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் ஒரு செல்போனை உபயோகிப்பது இல்லையாம் அமெரிக்கர்கள். 2.3 வீதம் பேர் மட்டுமே தங்களுடைய பழைய செல்போனை மறுசுழற்சி செய்து உபயோகப்படுத்துவதாகவும் மீதி 7 % பேர் அதைக் குப்பையில் வீசுவதாகவும் சமீபத்திய ஆய்வு சொல்கிறது.

நீண்ட நாட்கள் பயன் பாட்டில் இருக்கும் செல்போனில் உள்ள கேட்மியம், லெட் பெரிலியம் போன்ற தனிமங் களால் நோய் எதிர்ப்புச் சக்தி, நரம்பு மண்ட லம், மூளை, ஈரல், நுரையீரல் போன்றவை எளிதாகப் பாதிக்கப்படும்.

இதனால் அடிக்கடி செல்போன்களை மாற்றிக்கொண்டே இருப்பார்கள் அமெரிக்கர்கள்.

நடப்பு நிலவரப்படி சுமார் 250 ஆயிரம் தொண் எடை மதிக்கத்தக்க 500 மில்லியன் செல்போன்கள் குப்பைத் தொட்டிகளுக்குக் காத்திருக்கின்றன. இந்த வருடம் மட்டும் புதிதாக ஐந்து மில்லியன் செல்போன்கள் அங்கு பயன்பாட்டுக்கு வந்திருக்கின்றன.

இவை கிட்டத்தட்ட 75 சதவிகித உலக மக்கள் தொகைக்குச் சமம் என்று (International Tele Comunication Union) சமீபத்திய ஆய்வில் தெரிவித்துள்ளது.

நிற்க- 1973 இல் செல்போனை முதன் முதலில் உபயோகப்படுத்தியவர் டாக்டர் மார்ட்டின் கூப்பர். மேரி கிறிஸ்துமஸ் என்பதுதான் உலகின் முதல் குறுஞ்செய்தி.



அனுப்பியவர் நீல்டேப்வோர்த் ( டிசம்பர் 1992).

இன்று அமெரிக்காவில் மட்டுமே நாளொன்றுக்கு 4.1 மில்லியன் எஸ்.எம்.எஸ். அனுப்புகிறார்கள் யு.எஸ்.முழுக்க எஸ்.எம்.எஸ்.தான் போல.



செல்போன் பேசிக் கொண்டே வண்டி ஓட்டுவது எவ்வளவு ஆபத்து என்பதை உணர்த்தும் ஒரு பகீர் விளம்பரம்!

வாகனம் செலுத்துபவருடன் செல்போனில் பேசாதீர்கள்...

## P 911

**குறுத்தகவல் சேவை**

குறுந்தகவல் என்பது தான் எஸ். எம். எஸ்ஸின் தத்துமே. ஆனால் அதையும் அடித்து மடக்கி நுண்தகவல் ஆக்கிவிட்டார்கள் இன்றைய இளைஞர்கள். கல்லூரி மாணவர்களின் சுருக்கெழுத்து எஸ்.எம். எஸ். உங்களுக்குப் புரிகிறதா பாருங்கள்...!?

**B4- before**
**B4N- bye for now**
**BFF-best friends forever**
**BTW-by the way**
**CIAO, CYA-see you later**
**FYI-for your info**
**G2G-got to go**
**IDC-I don't care**
**KTKS-Okay,thanks.**
**L8R-later**
**OMG-oh my God**
**OTW- on the way**
**P911-Parents alert**
அப்பா- அம்மா பக்கத்தில்
**TIA - thanks in advance**
**TTYL- talk to you later.**

கரங்கள் சுத்தமாக இருக்கின்றனவா என்பதைக் கடவுள் பார்க்கிறார்; நிறைவாக இருக்கின்றனவா–என்பதையல்ல. ~ இங்கிலாந்து

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பொறுப்பான பதவியில் இருப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணக் குடாநாடு ஏதோவொரு வகையில் குழப்பத்தைச் சந்தித்துக் கொண்டே இருக்கிறது.

நீண்டகால யுத்தத்தை அனுபவித்த நாம் அனுபவிப்புக்கான அறுவடை எதுவுமின்றி எல்லாவற்றையும் இழந்ததுதான் மிச்சம் என்ற துயரத்தோடு 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற மகாகவியின் மொழி நடையில் பயணிக்கும் பரிதாபத்தில் இருக்கின்றோம்.

இந்தப் பரிதாப நிலைமைக்குக் கூட நிம்மதி கிடையாது. களவு, கொள்ளை, கடத்தல் என்ற நாடகம் அரங்கேறி அதன் தொடர் தற்போது சற்று ஓய்வெடுத்துள்ளது.

இறைவா! இனிமேலாவது நிம்மதியைத்தா! என்று பெருமூச்சு விடுவோமென்றால், அதற்கும் இடமில்லை.

பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் பலர் ஊழலில் ஈடுபடுகிறார்கள் என்பதே நிம்மதி இன்மைக்குக் காரணமாகும்.

குறிப்பாக கட்டிட ஒப்பந்தம், வீதி புனரமைப்பு, குளங்கள் புனர்நிர்மாணம், பாலங்கள் அமைத்தல் போன்ற ஒப்பந்தங்கள் தொடர்பில் நாளாந்தம் எமக்கு வருகின்ற முறைப்பாடுகள் கண்டு நெஞ்சம் வெடிக்கிறது.

ஏன் இப்படி? எடுத்த எடுப்பில் கோடீஸ்வரராக வரவேண்டும் என்ற நினைப்பா? அல்லது மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற தத்துவத்தை உணராத தன்மையா? இந்தக் குழப்பம் எங்களை வாட்டவே செய்கின்றது.

எங்களை நாங்களே குறைகாண்பது அவ்வளவு நல்லதல்ல என்ற பொது நோக்கில் சிந்தித்துச் சிலவற்றை விலக்கிவிட்டாலும் பொதுமக்கள் முன்வைக்கின்ற முறைப்பாடுகளை ஒட்டுமொத்தமாக நிராகரித்து விடுவதும் ஊடகங்களுக்கு அழகல்ல.

இருந்தும் நயத்தக்க நாகரிகம் பேணி இடம், பெயர் குறிப்பிடாமல் மோசடி அற்ற நிர்வாகச் சிறப்பை அமுல்படுத்தும் தார்மீகப் பொறுப்பை வலியுறுத்துவது அழகுடைச் சால்பாகும்.

பொதுவாக அதிகாரிகள், சேவை நோக்குடையவர்களாக இருக்க வேண்டும். எங்கள் யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் அவர்கள் அடிக்கடி கூறுகின்ற ஒரு கருத்து; நாங்கள் அரச பணியாளர்கள். மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டவர்கள்.

அந்தக் கடமையைச் சரிவரச் செய்து கடவுளுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும்.

இந்தக் கருத்தை ஒவ்வொருவரும் நினைவில் இருத்துவோமாயின் சேவையும் பணிவுமே மேலோங்கும்.

உள்ளத்தில் ஆசை ஏற்பட்டு விட்டால் குறுக்குப் பாதையில் உழைப்பைக் கண்டுவிட்டால், எங்களை நாங்களே மறந்து விடும் பரிதாபம் ஏற்பட்டுவிடும்.

எனவே அதிகாரிகள் தங்கள் பணியைச் சிறப்பாகச் செய்தால் மக்கள் நிச்சயம் வாழ்த்துவார்கள்.

அந்த வாழ்த்து எங்களை வாழவைக்கும். புகழைத்தரும். இத்தகைய ஒழுங்கான–செம்மையான–மக்கள் மனம் நிறைந்த அதிகாரிகள் எங்களிடம் நிறையவே இருக்கின்றார்கள்.

இருந்தும் ஒரு சிலரின் குறுக்குப்புத்தி பொது விமர்சனத்தை உருவாக்கி அதற்குள் பொறுப்பான பதவியில் உள்ளவர்களை இழுத்து விழுத்தி சாயம் பூசிவிடும் துன்பநிலை ஏற்பட்டு விடுகிறது.

இதைத் தடுக்க நேரிய பாதையில் பணியைத் தொடர்வதே ஒரேவழி.

# இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்ட ஐ.தே.கட்சி மறுசீரமைப்பு விவகாரம்

(கொழும்பு)

அரசியல் வட்டாரத்தில் அண்மைக்காலமாக பரபரப்பாகப் பேசப்பட்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைப்புத் தொடர்பான விவகாரம் அதற்காக கட்சிச் செயற்குழுவினால் நியமிக்கப்பட்ட மறுசீரமைப்புக்குழு சமர்ப்பித்த சிபாரிசு அறிக்கையின் மூலம் இணக்கப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்படி கட்சியின் பொதுச் செயலாளர், பொருளாளர் பதவிகள் தவிர்ந்த ஏனைய உயர் பதவிகளுக்கு (தலைவர் உட்பட) தேர்தல் மூலமே நியமனங்கள் இடம்பெற வேண்டுமென மறுசீரமைப்புக்குழு முன்வைத்திருக்கும் பரிந்துரைகளுக்கு கட்சிச் செயற்குழு அங்கீகாரமளித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையிலான மறுசீரமைப்புக்குழு சமர்ப்பித்த பரிந்துரை அறிக்கையை கட்சியின் செயற்குழு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கூடி ஆராய்ந்த பின்னரே இந்த அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

இதற்கமைய மேற்படி பரிந்துரை அறிக்கையை சுமார் இரண்டு மணிநேரம் ஆராயப்பட்டது. கட்சியின் நிர்வாகப் பதவிகள் , கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் மறுசீரமைப்புக்குழு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

செயற்குழு எடுத்த முடிபுகள் தொடர்பாகக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மறுசீரமைப்புக்குழுத் தலைவர் ஜோசப் மைக்கல் பெரேராவும் நேற்று முன்தினம் நண்பகல் செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளித்தனர். அதில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்பது தொடர்பாக நியமிக்கப்பட்ட மறுசீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள்ள செயற்குழு கூடி ஆராய்ந்தது. இதன் முதற்கட்டப்பணி முடிவடைந்துள்ளது. பரிந்துரைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய விரிவான செயற்பாடுகளை யூன் மாதம் இறுதிக்குள் செய்து முடிக்க செயற்குழு தீர்மானித்துள்ளது.

யூலை மாத இறுதியில் அல்லது ஓகஸ்ட் மாத முதல் வாரத்தில் கட்சியின் விசேட மாநாடு கூட்டப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும். அதன் பின்னர் கட்சியின் யாப்பு திருத்தப்பட்டு டிசம்பர் மாதத்தில் நடைபெறும் வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்படும்.

இந்தப் பரிந்துரைகள் தொடர்பாக மேலதிக யோசனைகள், திருத்தங்கள் தொடர்பாக ஆராய்வதே அடுத்த கட்டப்பணியாகும். இந்த விடயங்கள் தொடர்பாக மறுசீரமைப்புக் குழுத்தலைவர் ஜோசப் மைக்கல் பெரேரா, ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜேதாஸ ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து செயற்படுவர் எனவும் தெரிவித்தார்.(2-6)

## திஸநாயகத்துக்கு மன்னிப்பு வழங்க சட்டபூர்வ நடவடிக்கைகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்திற்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியிருப்பதால் அவர் தொடர்பான சட்டபூர்வ முன்னெடுப்புக்களை சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவருக்கு நிபந்தனையற்ற மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவே கருதுவதாக பாதுகாப்பு தொடர்பான ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் திஸநாயகத்துக்கு வழங்கப்படவுள்ள மன்னிப்புக் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே கெஹலிய ரம்புக்வெல இதைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடக சுதந்திர நாளன்று திஸநாயகத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மன்னிப்பு வழங்கவுள்ளதாக பீரிஸ் தெரிவித்திருந்தார். இப்போது அந்த அறிவித்தல் வந்து 20 நாட்கள் ஆகியுள்ள நிலையில் திஸநாயகம் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகளை நிறைவுசெய்வது குறித்து சட்டமா அதிபர் தேவையான உத்தியோகபூர்வ செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் இதற்கு சில காலம் பிடிக்கும் என்றும் ரம்புக்வெல மேலும் கூறியுள்ளார். (6)

## ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த 16 பேர் விமான விபத்தில் பலி

மங்களூரு விமான விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 16 பேர் பலியான சோகம் நிகழ்ந்துள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, சவுதியில் தொழில் செய்து வருபவர் சமீர் ஷேக் மங்களூருவில் இருந்த இவரது பாட்டி இறந்து விட்டதாக தகவல் வந்தது.

இதனையடுத்து நடைபெறும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக தனது மனைவி, 2 குழந்தைகள் உள்பட உறவினர்கள் 16 பேரை மங்களூருவுக்கு அனுப்பி வைத்துள்ளார். ஆனால் துரதிஸ்டவசமாக விபத்தில் 16பேரும் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. (2-6)

### கிளிநொச்சி அபிவிருத்திக்காக

## நாமல் தலைமையில் புதிய எம்.பிக்கள் குழு

(கொழும்பு)


கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கவனிக்கவென புதிய எம்.பிக் களைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி.யும் இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ இதற்குத் தலைமை தாங்குவார்.

இந்தக் குழுவில் இடம்பெறும் புதிய பாரா ளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு வரும் கிளி நொச்சிப் பகுதிக்கு வாராவாரம் சென்று அபி விருத்தி நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்வர்.

இதற்கேற்ற வகையில், ஒவ்வொரு எம். பிக்களுக்கும் வெவ்வேறு துறைகள் தனித் தனி யாக வழங்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. (2-6)

# ஆவியிலே புதுமையடைவோம்



அறியாமையாகிய இருள் பொருந்திய துன்ப உலகில் இருந்து வாழும் வாழ்க்கை, அருள் பொருந்திய நெஞ்சம் உடையவர்களுக்கு இல்லை.

ஆம், மண்ணில் வாழும் ஒவ்வொரு மானிடனும் துன்பத்தையோ, நோயையோ, சாவையோ விரும்புவது கிடையாது. பழமொழியும் அழகாக சொல்லுகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். எல்லோரும் இன்புற்று வாழவே விரும்புகின்றனர். ஆனால் இன்பத்தைக் கொடுக்கின்ற காரணிகளையோ, அந்த காரணிகளை அறிகின்ற வழிமுறையையோ நம்மில் பலர் அறிந்து கொள்வதில்லை.

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்று புத்தபிரான் கூறினார். அகிம்சையே நிலை வாழ்வு பெறுவதற்கு வழி என்று மகாவீரர் கூறினார். முற்பிறவியில் செய்த தீவினைகளே இப்பிறவியின் துன்பத்திற்குக் காரணம் என்று இந்து மதம் கூறுகிறது. எனவே ஞானம், பக்தி, கர்மம் என்னும் மூன்று மார்க்கங்களே பிறவிக்கடலிலிருந்து தப்பிக்க வழி என்றும் கூறுகிறது. நம் ஆண்டவர் இயேசு கூறுவதோ, அன்பே இறைவனை அடையவும், மனிதனோடு உறவு கொள்ளவும் வழி.

### பரமபிதா காட்டிய பாதை

இந்த அன்பைக் கொடுக்கின்றவர் ஆண்டவர்; அந்த ஆண்டவரின் ஆவியே நமக்கு அருளைக் கொடுப்பவர். இந்த அருள்தான் ஒவ்வொருவரின் உடலில் இருக்கின்ற உயிர். நம்மை உயிருள்ள மக்களாக இன்று வாழ வைத்துக் கொண்டிருப்பவர் அந்த தூய ஆவியே.

இந்த தூய ஆவியின் பெரு விழாவைத் தான் நாம் இன்று கொண்டாடுகிறோம்.


இந்தப் பெருவிழாவை பெந்தகோஸ்தே என்றால் ஐம்பதாம் நாள் என்பது பொருள். எனவே நமதாண்டவர் யேசுவின் உயிர்த்த ஐம்பதாம் நாள் கொண்டாடப்படுகின்ற விழா. இந்த விழாவில் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரும் அதே ஆவியிலே புதுமை அடை கிறோம். உறுதிப் பூசுதல் என்ற அருளடையாளத்தைப் பெறுகின்ற போது அதே ஆவியின் வரங்களையும் கொடைகளையும் கனிகளையும் பெற்று உறுதியடைகிறோம்.

எனவே உயிருள்ள மக்களாக சாட்சியும் பகர்கின்ற மக்களாக வாழ நினைத்தால் ஆவியின் மக்களாக வாழ்வோம். அதற்கு ஆவிக்கு எதிரான சுயநலம் , பொறாமை, பகைமை, பிரிவினைகளைக் களைந்து ஒரே குடும்பமாக வாழ்வோம். இந்த ஆவி நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலே உறைந்திருப்பதைக் கண்டு அந்த ஆவிக்குரிய வாழ்வை வாழ வேண்டும்.

நாமும் இன்று ஆவியில் புதுமை அடைவோம். அப்படியென்றால் நம்மிடையே இருக்கின்ற வேற்றுமைகளை களைந்து ஒற்றுமையை உருவாக்கி அந்த ஆவியின் உயிருள்ள பிரசன்னத்தை எல்லோரிடமும் கண்டு சாட்சிய வாழ்வை வாழ்வோம்.

ஜோன் ரொபேர்ட்

# அம்மாவின் அரவணைப்பில்



குழந்தைகள் தாயிடம் அதிக பாசம் காட்டுவதை நீங்கள் பார்த்திருக்கலாம். சில குழந்தைகள் அழுவதை யாராலும் கட்டுப் படுத்த முடியாது. ஆனால் அம்மாவை பார்த்தாலே உடனே அழுகையை நிறுத்திவிடும்.

பிறந்து சில மாதங்களில் ஆட்களைப் பார்த்து இனம் காணத் தெரியாத பொழுதே தன் தாயி னை குழந்தை நன்றாக அடை யாளம் தெரிந்து வைத்திருக்கும். தாயின் அரவ ணைப்பிற்குப் பின் னரே சமாதானம் அடையும். இல் லாவிட்டால் காரணம் இல்லாமல் அழுவதை நாம் பார்க்கலாம்.

ஆனால் இதுபோன்ற பாசத்தை தந்தையுடன் குழந்தை வெளிப் படுத்துவது கிடையாது.தாய் - குழந்தைக்கு மட்டும் அப்படி என்ன பிணைப்பிருக்கிறது?என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வந்தனர். அதற்கான விடை கிடைத்துவிட்டது. நியூ யோர்க் மாகாணத்தைச் சேர்ந்த மவுண்ட் சினாய் மருத்துவ நிலைய ஆய்வாளர்கள் இதை கண்டுபிடித் துள்ளனர்.

" அக்சிடாக்சின்" என்னும் ஒருவித ஹோர்மோன்கள் பெண்களின் உடலில் காணப்படுகின் றன. இவைதான் தாய் -குழந்தையின் பிணைப்பை தூண்டுகிறது. அதுமட்டுமல்லாமல் வேறு சில பணிகளிலும் இந்த ஹார்மோன் கள் பணியாற்றுகிறது.

தாய்க்கு, பாலூட்டும் உணர்ச்சியை அதிகமாக்குவது, உடல் உழைப்பைத்தூண்டுவது , குழந்தைகளை தாயின் அருகாமையை எதிர்பார்த்து காத்திருக்க வைப்பது போன்ற பணிகளில் அக்சிடாக்சின் பங்கேற்கிறது.

# நவீன வசதிகளுடன் செயற்கை 'கை'



அதிகரிக்கும் விபத்துக் களால் ஏராளமானவர்கள் உடல் உறுப்புக்களை இழக்கிறார்கள். வேறு சில பயங்கரவியாதிகளா லும் உடல் உறுப்புகள் செயலிழக்கலாம். இதுபோல திடீர் சம்ப வங்களால் கை, கால்களை இழந்தவர்கள் வாழ்வே திசைமாறி விடும்.

செயற்கை, கை, கால்கள் பொருத்திக் கொள்ளும் வசதி இருக்கிறது. ஆனாலும்அவை இயற்கையான கை, கால்கள் போல செயற்படாது.

பெயரளவில் அவை ஒரு அங்கமாகவே இருக்கும்.

இந்தக் குறையைக் களைந்து விபத்தின் கைகளை இழந்தவர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு அளிக்கும் விதத்தில் நவீன வசதிகள் நிறைந்த செயற்கை கை உருவாக்கப்பட்டுள்ளது. இது வரை உள்ள மற்ற செயற்கை கைகளைவிட இது நவீனமானது. குறிப்பாக " புளூடூத்" தொழில் நுட்பம் மூலமாக செயல்படக் கூடியது. இதன் உதவியால் எந்த விதமான பொருட்களையும் இயற்கை கைகளைப் போலவே பற்றிப் பிடித்து தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும். 5 விரல்களையும் தனித்தனியாக இயல்பான விரல்கள் போல இயக்க முடியும். இதன் உதவியுடன் 90 கிலோ எடையைக் கையாள முடியும் என்பது இதன் தனிச்சிறப்பு.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த டச்பயோனிக்ஸ் நிறுவனம் இந்த செயற்கை கையை வடிவமைத்துள்ளது. இதற்கு "ஐ லிம்ப் ஹாண்ட்" என்று' பெயரிடப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டே வடி வமைக்கப்பட இந்த செயற்கைக் கை தற்போது விற்பனைக்கு வந் துள்ளது.

விபத்தில் கையை இழந்த தீயணைப்பு வீரர் ஐயன் ரெய்ட் என்பவருக்கு இந்த செயற்கைக் கை முதல் முறையாகப் பொருத் தப்பட்டது.

கை துண்டிக்கப் பட்டதால் இழந்த உணர்வுகளை மீண்டும் பெற்றிருப்பதாகவும், அனைத்து வேலைகளையும் தடையின்றி செய்யமுடிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சலிப்பு தட்டாமல் படிக்கலாம்



படிப்பு என்றாலே மாணவப் பருவத்தில் லேசாக சலிப்பு எட்டிப் பார்க்கிறது. பெற்றோர்களின் அதீத அக்கறையால் நீண்ட நேரம் புத்தகமும் கையுமாக இருக்கும் மாணவர்கள் எளிதில் சோர்வடைந்து விடுகிறார்கள்.

அதேநேரத்தில் ஆர்வத்துடன் படித்த பாடங்களும் சிறிது நேரத்தில் மறந்து அவதிப்படும் மாணவர்களும் இருக்கிறார்கள். பாடங்கள் மறக்காமல் இருக்கவும், சலிப்புத் தட்டாமல் படிக்கவும் புதிய வழி இருக்கிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள். அதுதான் "தூங்கிக் கொண்டே படிக்கும்" வழி.

தூங்காமல் படித்தால் தானே முன்னேற முடியும் என்று நாம் நினைக்கிறோம். அது என்ன, தூங்கிக் கொண்டே படிப்பது" என்று கேட் கிறீர்களா?

ஆசிரியர் சொல்லித் தம் பாடங்களை ' ரெக்கோர்டிங்' செய்துவைத்துக் கொண்டு தூங்கும் நேரத்தில் கேட்டுக் கொண்டே படுத்தால் நன்றாக மனப்பாடம் ஆகிறது என்று புதிய ஆய்வில் கண்டுபிடித் துள்ளனர். மேலும் எளிதாக மீண்டும் நினைவு படுத்தவும் வசதியாக இருக்கிறதாம்.

அத்துடன் மெல்லிசையும் சேர்ந்து கொண்டால் அருகில் படுத்திருப்பவரின் இடைஞ்சல் தரும் குறட்டை சத்த தொல்லையில் இருந்து விடுபட்டு நிம்மதியான தூக்கமும் கிடைக் கிறது. பரீட்சைக்காக மாணவர்கள் விழுந்து விழுந்து மனப் பாடம் செய்வதை தவிர்க்க இது உதவும் என்று இதன் தயாரிப் பாளர்கள் கூறுகிறார்கள். இங்கிலாந்தில் இந்தக்கருவி விற்பனைக்கு கிடைக்கிறது.

இன்று செல்போனில் பாடல் கேட்டுக் கொண்டே தூங்கும் பழக்கம் பலருக்கு ஒட்டிக்கொண்டு விட் டது.

அந்த நேரத்தில் பாடங்களை ரெக்கோர்டிங் செய்து கேட்டால் நல்ல மாற்றங்கள் ஏற் படுமே!

# உலகின் சிறியவை

நாம் மிகபிரமாண்டமான இந்த உலகைப் பார்த்து பிரமித்தாலும் நம்மை மேலும் வியக்க வைப்பது மிகச் சிறியவை தான். ஆம், மிகச் சிறிதான அணு அணுவாகச் சேர்ந் தது தானே இந்த உலகமே. சீறும் சிறுத்தையைப் பார்த்தால் மிரண்டு விடும் நமக்கு சிறுத்தைக் குட்டியை பார்த்தால் அருகில் சென்று கொஞ்சி விளையாட ஆசை வந்து விடும்.

எனவே மிகச் சிறியதில் நமக்கு ஈர்ப்பு அதிகம் தான். அப்படி உல கின் மிகச் சிறிய சில தகவல்கள் உங்களை அதிசயிக்க வைக்கக் காத்திருக்கிறது.

## அதிசய குழந்தை


ஆரோக்கியமான குழந்தை என்றால் பிறக்கும் போது சுமார் 3 கிலோ எடை இருக்க வேண்டும். ஆனால் ஒரு குழந்தை வெறும் 280 கிராம் எடையுடன் பிறந்தது. உலகில் மிகக்குறைந்த எடை யுடன் பிறந்த மிகச்சிறிய குழந் தை இதுதான். அமெரிக்காவின் மியாமி நகரில் உள்ள மருத் துவமனையில் 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி இந்தக் குழந்தை பிறந்தது. இதன் பெயர் அமைலியா டெய்லர்.



கருவான 157 ஆவது நாளி லேயே (6 மாதங்களில்) பிறந்து விட்டதால் இந்தக் குழந்தையின் எடை குறைவாக இருந்தது. இந்தக் குழந்தை பிறந்தபோது 24 சென்ரிமீற்றர் உயரம் தான் இருந்தது. 400 கிராமிற்கு குறை வாக பிறக்கும் எந்தக் குழந்தை யும் வாழ்வது கடினம் என்பது மருத்துவ உலகின் முடிவு. ஆனா லும் அமைலியா டெய்லர் வாழ்ந்து வருவது இன்னொரு ஆச்சரியம். படத்தில் நீங்கள் பார்ப்பது அந்தக் குழந்தையின் பிஞ்சு பாதங்களைத்தான்.




## குரங்கின் விலை ஆயிரம் டொலர்




விரல் இடுக்கில் ஒரு வித நடுக்கத்துடன் பற்றிக் கொண்டிருப் பது எலிக்குட்டிகளல்ல குரங்கு குட்டிகள். பிக்மி மார்மோ செட் எனப்படும் இந்த இனக் குரங்குகளும் சாதா ரண குரங்குகள் போல நம்மை மகிழ்வூட்டும் பலவித சேட்டைகளில் ஈடுபடும்.

ஆனால் அடர்ந்த வனப் பகுதி யில் வசிக்கும் இவை நம்மை நெருங்கி வருவதில்லை. இந்த வகை குரங்குகள் பிரேசில், ஈகுவேடார் நாட்டின் வனங்களில் காணப்படு கின்றன.

இந்தக் குட்டிகளின் உயரம் வால் பகுதியுடன் சேர்த்தே 6 அங்கு லம் தான். இரண்டு முதல் 6 வரை கூட்டமாக சேர்ந்து வாழும் இந்த வகை குரங்குகளை நீங்கள் விரும் பினால் வீட்டிலும் வளர்க்கலாம். ஒரு குரங்கிற்கு ஆயிரம் டொலர் செலவழித்தால் உங்கள் கைகளி லும் விளையாடத் தயாராக இருக் கிறது இந்த குட்டிக் குரங்குகள்!

## மிகச் சிறிய கமரா



படத்தில் நீங்கள் பார்ப்பது தான் உலகின் மிகச்சிறிய டிஜிட் டல் கமரா. இது நமது 2 விரல் அகல அளவில்தான் இருக்கிறது. படம் பிடிப்பதற்காக ஒரே ஒரு அழுத்தி மட்டுமே உண்டு. மற்றப்படி வியூ பைன்டர் திரை போன்றவையெல் லாம் கிடையாது. இந்த கமராவை வடிவமைத்தவர் பெயர் சங்க்வூ பார்க் என்பதாகும். படம் பிடித்த பின் கமராவை நேரடியாக கணனியுடன் இணைத்து படங்களை பிறிண்ட் எடுத்துக் கொள்ளலாம்.

## இது டி.வி.தாங்க...

இவர் அணிந்திருப்பது மூக்குக் கண்ணாடி அல்ல உலகின் மிகச் சிறிய டி.வி. ஜப்பான் விஞ்ஞானி கள் இந்த டி.வி.யை உருவாக்கி உள்ளனர். தனி ஒருவர் எங்கு வேண்டுமானாலும் அணிந்து செல்லும் வகையில் இது வடிவமைக் கப்பட்டுள்ளது.



'டி3-எப்' என்ற பெயருடைய இந்த சிறிய டி.வி. யின் விலை கொஞ்சம் பெரியது.

சுமார் ஆயிரம் டொலர்கள் அம்மாடி யோவ்!

# நான்காவது ஐ.பி.எல். தொடரில் 10 அணிகளும் 2 பிரிவாகப் பிரிப்பு

(புதுடில்லி)

ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடர் 2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 8 அணிகள் பங்கேற்ற இந்த தொடரில் ராஜஸ்தான் சம்பியனானது.

2009ஆம் ஆண்டு நடந்த தொடரில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் இந்த ஆண்டு நடந்த 3ஆவது ஐ.பி.எல். தொடர்பில் சென்னை சுப்பர் கிங்ஸும் சம்பியன் பட்டம் பெற்றன.

அடுத்த ஆண்டு (2011) நடைபெறும் 4 ஆவது ஐ.பி.எல். தொடரில் கூடுதலாக 2 அணிகள் பங்கேற்கின்றன. கொச்சி, புனே அணிகள் பங்கேற்பதால் அணிகளின் எண்ணிக்கை 10ஆக உயர்ந்துள்ளது. இதனால் மொத்த ஆட்டங்களின் எண்ணிக்கை 94 ஆக அதிகரித்துள்ளது.

இதனால் 4ஆவது ஐ.பி.எல். தொடர் முறையில் மாற்றம் செய்வது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. என்.பி.ஓ. மாதிரி இந்தப் போட்டியை நடத்தலாமா என்று பரிசீலிக்கப்பட்டுவருகிறது.

இதன்படி போட்டிகளில் பங்கேற்கும் 10 அணிகளும் 2 பிரிவாகப் பிரிக்கப்படும். 2 பிரிவிலும்தலா 5 அணிகள் இடம் பெறும். உள்ளூரிலும் வெளியூரிலும் இந்த அணிகள் மோதும் 2 பிரிவிலும் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர்-6 சுற்றுக்கு நுழையும். இதன் மூலம் ஆட்டங்களின் எண்ணிக்கை குறையும் ஒரு அணி 13 ஆட்டங்களில் மோதும் வகையில் போட்டி அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சூதாட்ட விவகாரம் பாக்.வீரர்களிடம் விசாரணை

அவுஸ்திரேலியா சுற்றுப்பயணத்தின் போது, சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களிடம் ஐ.சி.சி. விசாரணை நடத்த உள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அவுஸ் திரேலியா சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணி டெஸ்ட், ஒரு நாள் மற்றும் இருபது-20 தொடர்களில் படுதோல்வி அடைந்து வெளியேறியது. இத்தொடரில் கம்ரன் அக்மல் உள்ளிட்ட சில பாகிஸ்தான் வீரர்கள், கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றச் சாட்டு எழுந்தது. இது குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஊழல் தடுப்புக் குழு விசாரணை நடத்த முடிவு செய்துள்ளது.




# இலங்கை கிரிக்கெட் வீரர்களுடன் இந்திய கலைஞர்கள் மோதல்

(கொழும்பு)

இந்தியத் திரைப்பட நட்சத்திரங்களும் இலங்கை கிரிக்கெட் வீரர்களும் பங்கேற்கும் இருபது-20 கிரிக்கெட் போட்டியொன்று எதிர்வரும் ஜூன்மாதம் 4ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

சர்வதேச திரைப்படக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இப்போட்டி எஸ்.எஸ்.சி. மைதானத்தில் பிற்பகல் 1.00 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணிக்கு சாருகானும் இலங்கை அணிக்கு குமார் சங்கக்காரவும் தலைமை வகிக்கவுள்ளனர். இலங்கை அணியின் முன்னாள் வீரர்களான அரவிந்த டி சில்வா, விக்கெட் காப்பாளரும் அதிரடி ஆட்டக்காரருமான களுவித்தாரண ஆகியோரும் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தியத் திரைப்படக் கலைஞர்களுடன் இலங்கை கலைஞர்களும் வழங்கும் இசை, நடன நிகழ்ச்சிகளும் அன்றைய தினத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# உலகக்கிண்ண தொடர்; ஸ்பெயின் அணி அறிவிப்பு



(மாட்ரிட்)

உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடருக்கான ஸ்பெயின் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடர் தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் 11ஆம் திகதி முதல் ஜூலை 11ஆம் திகதி வரை நடக்கிறது.

இத் தொடரில் பங்கேற்கும் 32 அணிகளில் இடம் பெற்றுள்ள வீரர்களை ஒவ்வொரு நாடும் அறிவித்து வருகிறது. 23 பேர் கொண்ட ஸ்பெயின் அணியை அந்த அணியின் பயிற்சியாளர் விசென்ட் டெல் போஸ்குய் அறிவித்துள்ளார்.

**வீரர்கள் காயம்**

காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் பெர்னாண்டோ டோரஸ், செஸ்க் பேப்ரிகாஸ் ஆகியோர் அணியில் இடம் பிடித்துள்ளனர். போட்டி ஆரம்பமாவதற்கு முன்பு அவர்கள் முழு உடல்தகுதி பெற்று விடுவார்கள் என்று பயிற்சியாளர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த உலகக்கிண்ண தொடரில் மார்கோஸ் சென்னா, சான்டி சஜோர்லா, டிகோ லொபஸ், டானி குயூஜா, அல்வரோ நெக்ரிடோ ஆகியோருக்கு இறுதி அணியில் இடம் கிடைக்கவில்லை.

**ஸ்பெயின் அணி**

உலகக்கிண்ண தொடருக்கான ஸ்பெயின் அணி வருமாறு,

**கோல்காப்பாளர் :** இகேர் கேசிலாஸ் (ரியல் மாட்ரிட்), பெப்ரீய்னா (லிவர்பூல்) விக்டர் வால்டெஸ் (பார்சிலோனா),

**பின்களம் :** ரால் அல்பியோ (ரியல் மாட்ரிட்), அல்வரோ அர்பெலோ (ரியல் மாட்ரிட்), ஜோன் கேப்டெவிலா (வில்லா ரியல்), கார்லோஸ் மார்ஷெனா (வாலென்சியா),ஜெரார்ட் பிக் (பார்சிலோனா), சார்லஸ் புயோல் (பார்சிலோனா), செர்ஜி ரமோஸ் (ரியல் மாட்ரிட்),

**நடுகளம் :** சாபி அயலான்சா (ரியல் மாட்ரிட்), செர்ஜியோ (பார்சிலோனா), செஸ்பாப்ரீகஸ் (அர்செனல்), ஆந்த்ரே இனிஸ்டா (பார்சிலோனா), ஜாவி மார்டினஸ் (அத்லெடிக் பில்பா), டேவிட் சில்வா (வாலென்சியா), ஷாவி (பார்சிலோனா),

**முன்களம் :** ஜீசஸ் நவாஸ் (செவில்லா), ஜுயன் மாடா (வாலென்சியா), பெட்ரோ (பார்சிலோனா), பெர்னாண்டோ லோரெண்ட் (அத் லெடிக் பில்பா), பெர்னாண்டோ டோரெச் (லிவர்பூல்), டேவிட் வில்லா (வாலென்சியா).

# சிம்பாவே முக்கோணத் தொடரில் இளம் இலங்கை அணி பங்கேற்பு

சிம்பாவோயில் இடம்பெற இருக்கும் முக்கோண ஒரு நாள் தொடரில் இலங்கை அணியின்தலைவராக டில்சான்நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மூத்த வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, சனத் ஜெயசூரிய, முத்தையா முரளிதரன் மற்றும் லசித் மலிங்க ஆகியோருக்கு இத் தொடரில் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

சகல துறை துடுப்பாட்ட வீரர் ஜீவன் மெண்டிஸுக்கு முதன் முறையாக சர்வதேச போட்டிகளில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் விளையாடிய இடது கை துடுப்பாட்ட வீரர் லகிறு திரிமனுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிம்பாவேயில் இடம்பெறும் இத் தொடரில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக உப்புல் தரங்க, சாமர சில்வா மற்றும் டில்கார பெர்னாண்டோ ஆகியோர் களம் இறங்குவார்கள்.

இலங்கை, இந்தியா, சிம்பாவே அணிகள் பங்கேற்றும் இப் முக்கோணத் தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகின்றது.



தென்னாபிரிக்காவில், உலகக்கிண்ண கால்பந்துத் தொடர் அடுத்த மாதம் 11ஆம் திகதி தொடங்குகிறது.

இதில் சாதிக்க ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பயிற்சி மேற்கொண்ட ஜப்பான் உதைபந்தாட்ட அணியினர்.

# வறுமையில் வாடும் மைக் டைசன்!

'மைக் டைசன்' ... ஞாபகமிருக்கிறதா?

'காது கடி புகழ்' குத்துச்சண்டை வீரர் என்றால் உடனே உங்கள் ஞாபகத்துக்கு வரக்கூடும்.

டைசன் இன்று என்ன செய்கிறார்? இந்த இரும்பு மனிதர் 'உடைந்து' போயிருக்கிறார். ஆம், குத்துச்சண்டையில் கோடிகளைக் குவித்த மைக் டைசன் தற்போது வறுமையில் வாடுகிறார்.

கண்மண் தெரியாமல் செலவழிக்கும் வழக்கம் உடையவர் மைக் டைசன். ஆனால் குத்துச் சண்டையிலிருந்து ஓய்வு பெற்றபின் அதில் கொட்டிய பணமழை நின்றுபோக சிக்கலாகிவிட்டது. இன்று தன் அன்றாடச் செலவுகளைச் சமாளிக்கவே கஷ்டப்படுவதாக வெளிப்படையாகக் கூறுகிறார் டைசன்.

ஆனாலும் தான் மகிழ்ச்சியாகவே இருப்பதாகச் சொல்கிறார் தான் பங்கேற்ற டிவி 'ரியாலிட்டி ஷோ' வான 'டேக் ஒன் டைசன்'-ல் இதைத் தெரிவித்தார் மைக்.

பணக்கஷ்டம் இருந்த போதும் தனது இன்றைய வாழ்க்கை மகிழ்ச்சியாக இருப்பதாகவும் மூன்றாவது மனைவி லக்கிஹா ஸ்பைசர் மூலம் வாழ்க்கையில் இரண்டாவது வாய்ப்புப்பெற்ற நன்றியுணர்வோடு இருப்பதாகவும் கூறுகிறார் டைசன்.

"நான் முற்றிலுமாக செலவுக்குப் பணம் இல்லாமல் உடைந்துபோய் இருக்கிறேன் ஆனால் அதிர்ஷ்ட வசமாக இன்று எனக்கு அருமையான வாழ்க்கை வாய்த்திருக்கிறது. என்னை நன்றாக கவனித்துக்கொள்ளும் அற்புதமான மனைவி கிடைத்திருக்கிறாள்" என்கிறார் டைசன் நெகிழ்ந்துபோய்.

இவரது வங்கிக்கணக்கில் ஏதும் பணம் இருக்கிறதா என்று கேட்டால் இல்லவே இல்லை மொத்தமாக மீளப்பெற்றுவிட்டேன். நான் ஜாலியாக பணத்தை செலவழித்து வந்தேன். அதனால் கடைசியில் இப்படித்தான் ஆகும் என்று எனக்குத் தெரியும்.


ஆனால் ஒருவிதத்தில் நான் நன்றிக் கடன் பட்டுள்ளேன். இப்படிப்பட்ட நல்ல மனைவி கிடைப்பதற்கு நான் தகுதியானவன் கிடையாது.

இப்படிப்பட்ட நல்ல குழந்தை களின் அப்பாவாக இருக்கவும் தகுதியற்றவன். அந்த வகையில் நான் மிகமிக நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்.

பல்வேறு உறவுகளில் பிறந்த 5 குழந்தைகள் டைசனுக்கு இருக்கிறார்கள். அவர்களில் இளையவர், தற்போதைய மனைவி ஸ்பைசருக்கு பிறந்த ஒன்றரை வயதுக் குழந்தையான மிலான்.

போதைப் பொருள், மதுபானம் பயன்படுத்தியது தொடர்பான பல்வேறு வழக்குகளில் சிக்கி பல ஆண்டுகள் அலைக்கழிந்தார் டைசன் தனது 'கன்னாபின்னா' வாழ்க்கை முறைகளால் 2003ஆம் ஆண்டிலே திவால் நோட்டீஸும் கொடுத்தார்.

எதிராளிகளைத் தனது குத்துக்களால் நிலைகுலைய வைத்த மைக் டைசன், 'வாழ்க்கை' விட்ட குத்தை எதிர்கொள்ள முடியாமல்



தடுமாறிப் போயிருப்பது வேதனையான வேடிக்கை.

# வடக்குக்கான சீனாவின் உதவி இந்தியாவை முரண்பட வைக்கும்

## ஆய்வாளர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளுக்கு உதவத் தயார் எனச் சீனா அறிவித்துள்ளமையானது இந்தியாவுடன் முரண்படும் விடயம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் டி.எம்.ஜயரட்ணவுடன் அண்மையில் சந்திப்பொன்றை மேற்கொண்ட சீனாவின் இலங்கைக்கான தூதுவர் யங் சியுபிங் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் அதிக முதலீட்டு வருமானத்தைப் பெற்றுத் தரக் கூடிய பகுதியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகக் குறிப்பாகக் கிளிநொச்சி, மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் முதலீடு செய்வதற்குச் சீன முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சீன முதலீட்டாளர்கள் 91 சதவீதமான மனித வளங்களை இலங்கையில் இருந்தே பெற்றுக் கொள்வதாகவும் 9 சதவீதமான மனித வளங்களே சீனாவில் இருந்து பெறப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சீனாவினால் நிர்மாணிக்கப்படுகின்ற அம்பாந்தோட்டைத் துறைமுகம் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களில் சீனத் தொழிலாளர்களே அதிகளவில் காணப்படுவதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

'இதேவேளை சீனா, வடக்கில் காலடி வைத்தால் அது இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் முறுகலுக்கு வழி வகுக்கும் என ஆய்வாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ச-5)

## முன்பள்ளி விளையாட்டு விழா

காரைநகர் ஊரி அமெரிக்க இலங்கை மிஷன் நிலைய அன்புச்சோலை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் ஊரி சிறுவர் நட்புறவுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வண.பிதா ஏ.கமலகுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் காரைநகர் கிளை முகாமையாளர் இ.சிவகுமாரனும் கௌரவ விருந்தினராக வண.பிதா தேவதாஸ் அடிகளார், காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் இரா.லோகநாதன், சமுர்த்தி முகாமையாளர் தி.சசிகுமார், யாழ்ரன் கல்லூரி அதிபர் திருமதி க.லிங்கேஸ்வரன், ஊரி அ.மி.த.க. பாடசாலை அதிபர் இ.ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-246)

## முல்லைத்...

வியலாளர்கள் சுயாதீனமாகச் செல்ல முடியாது. படையினரின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என ஊடக அமைப்புக்கள் குற்றஞ் சாட்டியுள்ளன.

இதேவேளை போர் நடந்த சில பகுதிகளுக்கு அரச ஊடகவியலாளர்கள் மாத்திரம் செல்ல முடியும் என்றும் ஏனைய ஊடகவியலாளர்கள் செல்ல முடியாது என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-5)

## அம்பாந்...

சஜித் பிரேமதாச இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கட்சித் தலைமைக்காகப் போட்டியிட்டால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும். அம்பாந்தோட்டை கஜநாயக்க கம பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## தென்னா...

விருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய இளைஞர்கள் சேவை மன்றப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

இதேவேளை வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் உயர் மட்டத்தை அடைவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கான திட்டம் ஒன்றை பிரதேச ரீதியாக இனங்கண்டு தயாரித்து ஆறு மாதத்திற்குள் இலங்கை அரசாங்கம் ஊடாகத் தென்னாபிரிக்க அரசுக்குச் சமர்ப்பிக்கப்படும்போது இவ் அபிவிருத்திக்கு தென்னாபிரிக்க அரசு உதவ முன்வரவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். (ச-7)

## இராணுவ...

முதல் இராணுவ நீதிமன்றம் அவர் இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த போது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்காக நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## கிளைமோர்க்...

அவ்விடத்துக்கு வந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் அந்தக் கிளைமோர்க் குண்டினைச் செயலிழக்கச் செய்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றுள்ளனர். அக்குண்டு 2006 ஆம் ஆண்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிய வருகின்றது. (ச-5)

## தீர்வுத் திட்ட மாதிரி அறிக்கை...

மக்களிடம் இதற்கான அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்பதே தனது தேவையாகும் எனவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அதனை அமுல்படுத்தப் போவதாகவும் ஜனாதிபதி அந்தச் செவ்வியின் போது தெரிவித்திருந்தார்.

அதேபோல் கடந்த வருடம் ஜுலை மாதம் பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இந்தியாவுக்கு விஜயம் செய்ததுடன் இரு நாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றிலும் கையெழுத்திட்டனர்.

இதன் மூலம் இந்தியாவுக்குத் தேவையான அரசியல் தீர்வு தொடர்பில் ராஜதந்திர இணக்கம் வழங்கப்பட்டது.

இதேவேளை அண்மைக் காலமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இந்தியா மேற்கொண்டு வரும் பொருளாதாரத் தலையீடுகள் அதிகரித்துள்ளன. இந்தியாவின் புதிய தூதரக அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது.

அரசாங்கம் மற்றும் இந்தியாவுக்கிடையிலான இந்தச் செயற்பாடுகள் தேர்தலுக்கு முன்னர் ராஜபக்ஷ அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் மேற்கொண்ட இணக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ என்ற நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறான சூழல் ஏற்பட்டால் இலங்கை இந்தியாவின் மற்றுமொரு மாநிலமாக மாறி இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மையை இழந்த ஆசியாவின் செழிப்பு மிக்க நாடாக மாறுவதைத் தடுக்க முடியாது என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## முன்னனுமதி பெறாதது...

நம்புகின்றேன்.

யார் வேண்டுமானாலும் முகாமுக்குப் போகலாம். ஊடகவியலாளர்கள் பலர் கூட போய் வந்திருக்கின்றார்கள். ஆனால் அங்குள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

ஜனாதிபதி செயலரோடு நான் பேசிய போது ஜனாதிபதியின் செயலாளர் இது போன்ற முன்னனுமதியை அவர் பெற்றுச் செல்வார்கள் என்றுதான் நினைத்திருப்பார்.

போர் முடிந்து விட்டது என்பது உண்மை. இருந்தும் முகாம்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களைப் பார்க்க சில நடைமுறைகள் இருக்கின்றன. அதை எல்லோருமே பின்பற்ற வேண்டும்.

குப்பனும் சுப்பனும் முகாமுக்குள் போய் பார்த்துவிட முடியாது. நிச்சயமாக அவர்களுக்கு அவர்களின் வாக்காளர்களைச் சந்திக்க நிச்சயம் அனுமதியிருக்கின்றது. ஆனால் இங்கே நிலைமை வித்தியாசமாக இருக்கின்றது.

வாக்காளர் ஒரு முகாமிலோ அல்லது வேறு இடத்திலோ இருந்தால் அவர்களைச் சந்திக்க ஒரு நடைமுறை இருக்கின்றது. அது கடினமான ஒன்றுமில்லையே.

எங்களிடம் மறைப்பதற்கு எதுவுமே இல்லையே. அவர்கள் முறைப்படிச் செல்ல விரும்பவில்லை. அதுதான் இங்கே நடந்திருக்கின்றது என்றார் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல. (ச-3,5)

## முகாம் மக்களைச் சந்தித்துப்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் வவுனியா முகாம்களைப் பார்வையிட அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளதாகக் கூறுகின்றனர்.

வவுனியா முகாம்கள் பகுதிக்கு நேற்றுச் சனிக்கிழமை காலை சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முகாம்களுக்கு நுழைந்து அங்கு தங்கியுள்ள மக்களைச் சந்திக்க அனுமதி வழங்கப்படவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அரசியல்வாதிகளை முகாம்களுக்குள் அனுமதிக்க வேண்டாம் என்று இலங்கையின் பாதுகாப்புச் செயலரிடமிருந்து தமக்கு அறிவுறுத்தல் வந்துள்ளதாகத் தெரிவித்து முகாம்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி தாங்கள் முகாம்களைப் பார்வையிடுவதைத்தடுத்து விட்டதாக இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

தாங்கள் கொழும்பிலிருந்து புறப்படுவதற்கு முன்பாகவே வவுனியா முகாம்களைப் பார்வையிடுவது தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியதுடன் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்கவிடம் தொலைபேசியில் உரையாடியதாகவும் குறிப்பிட்ட சம்பந்தன், தாங்கள் வவுனியா செல்வதில் எவ்வித பிரச்சினையும் இருக்காது என லலித் வீரதுங்க தங்களிடம் வாய்மொழியாக உறுதியளித்திருந்ததாகத் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகளாகிய தாங்கள் இடம்பெயர்ந்த மக்களைச் சந்திக்க அரசாங்கம் அனுமதி மறுப்பது சரியல்ல என்று விமர்சித்தார்.

**தொலைபேசி அழைப்புக்கு பதில் எதுவுமில்லை**

இதேவேளை செட்டிக்குளம் முகாமுக்குச் செல்வதற்கு படையினர் அனுமதிக்காமை தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் தொடர்பு கொண்டு பேசிய போது,

அரை மணிநேரத்தில் தாம் பதிலளிப்பதாகக் கூறிய அவர், 30 நிமிடங்களின் பின்னர் தமது தொலைபேசி அழைப்புகளுக்குப் பதிலளிப்பதைத் தவிர்த்துக் கொண்டதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று வவுனியா செட்டிக்குளத்தில் உள்ள அகதிகள் முகாம்களுக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இரா.சம்பந்தன் தலைமையிலான 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் காலை செட்டிக்குளம் முகாமுக்குச் சென்றபோது பாதுகாப்பு அமைச்சின் அனுமதியில்லாமல் முகாமுக்குள் அனுமதிக்க முடியாது என படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கொழும்பிலிருக்கும்போது ஜனாதிபதியிடம் தொடர்பு கொண்டு ஜனாதிபதி செயலாளரிடம் அனுமதியுடனேயே செட்டிக்குளத்திற்குச் சென்றதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் தாம் செட்டிக்குளம் முகாமுக்குள் அனுமதிக்கப்படாமை தொடர்பில் சம்பந்தன், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

இதன்போது அரை மணித்தியாலங்கள் சென்றும் பின்னர் தமது தொலைபேசி அழைப்புகளுக்குப் பதிலளிப்பதைத் தவிர்த்துக் கொண்டதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியிடம் பேசுவது தொடர்பாக எதுவித முடிபும் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக ஆலோசிக்கலாம். ஆனால் நாங்கள் தயவாகக் கேட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை எனச் சம்பந்தன் எம்.பி. கூறினார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் அந்த முகாமுக்கு அவர்கள் செல்வதற்கு உரித்துண்டு. அந்த உரித்து மறுக்கப்பட்டால் எங்களது மக்கள் அவமதிக்கப்படுகின்றார்கள்.

எங்களுடைய மக்கள் இந்த நாட்டினுடைய சம பிரஜையாகக் கருதப்படவில்லை. நிச்சயமாக இதனுடைய பிரதிபலிப்புக்கள் பல இருக்க வேண்டும். இருந்தும் உண்மையை அறிவதற்காக நாம் அந்த முகாமுக்குச் செல்வதற்கு எம்மால் முடியுமாயிருந்தால் நாம் செய்ய வேண்டியதைச் செய்வோம் என்றார். (ச-5)


### தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் கிளிநொச்சி

**விஷேட பேருந்து சேவை**

நாளை 24.05.2010ஆம் நாள் பக்தர்களின் நன்மை கருதி முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் பொங்கல் விழாவை முன்னிட்டு தனியார் பேருந்து உரிமையாளர் கழகத்தினால் கிளிநொச்சி மாவட்ட வரையறை எல்லையில் இருந்து விஷேட பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதை பக்தர்களுக்கு மனமகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

த.ஜெகதீஸ்வரன் -தலைவர்
தனியார் பேருந்து உரிமையாளர் கழகம், கிளிநொச்சி.
(1550)



### கலைமகள் அழகுநிலா பயிற்சி நிலையம்

நான்கு நாட்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் சிறப்பு மிக்க சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சிக்கு வயது கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன் முறையாகும். இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள். அனுமதிக்கு முந்துங்கள்.

பயிற்சிகள்

- Facial (ஏழு வகை)
- Threading
- Pimple Treatment
- Waxing
- Hair Streching (இருவகை)
- Hair Perming (இருவகை)
- Hot Oil Massage
- Hair Cutting
- Hair Dye
- Hair Colouring
- Pedeicure Manicure
- கறுப்புகாய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
- Bleaching
- Bridal Makeup (5 வகை)

பயிற்சிக்கான கட்டணம் : 4000/-
பயிற்சி ஆரம்பம் : 27.05.2010
பயிற்சி நேரம் : 9.00 மணி-பி.ப 4.00மணி

தொடர்புகள்: 077 3719071, 021 4908151

**கலைமகள் அழகுநிலா**
390, பிரதான வீதி பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.
(1548)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.